மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ

சுடுகாட்டுச் சாம்பல்

மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 1 | 13—9—59 | ஒலி 48

அறிவு பிறந்த நாள் !
நம்
அண்ணா பிறந்த நாள் !

நமது அறிஞர் அண்ணாவுக்கு வருகிற பதினைந்தாம் தேதியோடு 50 வயது பூர்த்தியாகிறது!

1909-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாள் நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தார்கள்! தமிழகத்தின் அறிவு பிறந்த நாளும் அந்த நாள்தான்! தமிழகத்தின் ஆற்றல் பிறந்த நாளும் அந்த நாள் தான்! ஏன், தமிழ் மொழியே பிறந்ததும் அந்த நாள்தான்! சுருக்கமாகச் சொன்னால் தமிழகமே பிறந்த நாளும் அந்த நாள்தான்!

இன்னும் சொல்லப்போனால் எழுச்சி பிறந்த நாள், உணர்ச்சி பிறந்த நாள் அந்த நாள்தான் என்று கூடச் சொல்லலாம்! இன்னும் ஒரு படி மேலே சென்று சொல்ல வேண்டுமானால் நமக்கெல்லாம், தமிழர்களுக்கெல்லாம் உயிரே பிறந்த நாள் அந்த நாள் தான்! அந்த நன்னாளை நாமெல்லாம் பொன்னாளாகக் கொண்டாடி மகிழ வேண்டும்! இது தமிழகத்தில் பிறந்து விட்ட நல்ல இதயம் படைத்த ஒவ்வொரு தமிழ் மகனுடைய நீங்காத கடமை என்று சொன்னால் அது எந்த விதத்திலும் மிகையாகாது!

அறிஞர் அண்ணா பிறப்பதற்கு முன்பு நிலமுண்டு, நீருண்டு, நாடுண்டு அங்கே மனிதர்களும் உண்டு! ஆனாலும் அவைகளுக்கெல்லாம் உயிரில்லை! அது கற்காலமாகத்தான் இருந்தது! மனிதர்கள் உயிரோடு கூடிய உடலோடுதான் உலவினார்கள்! ஆனால் அறிவோடுகூடிய மனிதனாக எவருமே வாழவில்லை! பகுத்துணர்ந்து பார்க்கும் பகுத்தறிவுவாதியாக எவருமே திகழவில்லை!

அறிஞர் அண்ணா பிறப்பதற்கு முன்பு இங்கே மொழியுண்டு, கலையுண்டு, நல்ல காவியமும், ஓவியமும் உண்டு! ஆனால் அவைகளுக்கு உயிர்தானில்லை! வெறும் உடலோடு இருந்த மொழிக்கு உயிரூட்டியவர், சிறப்பூட்டியவர், நமது அண்ணாதான்! வளமோடு பிறந்தது தான் தமிழ் மொழி! ஆனால் அது இடையிலே வறண்டு கிடந்ததை எவருமே மறுக்க முடியாது! "அந்தக் காலத்தில் தமிழில் வீரச் சொற்களில்லை, தமிழில் உணர்ச்சி சொற்களில்லை" என்ற நிலைதான் இருந்து வந்தது! இன்று வீரத்தின் விளைநிலமே தமிழ் மொழிதான்! இந்த உண்மையை திரு. நாராயண ஐயங்கார் தெள்ளத் தெளிய எடுத்து விளக்கி இருப்பதை நாடு அறியும் என்றே நினைக்கிறோம்!

அறிஞர் அண்ணா பிறப்பதற்கு முன்பு தமிழ் நாட்டில் எல்லா கலைகளும் இருக்கத்தான் செய்தன! ஆனால் அந்தக் கலைகளெல்லாம் மக்களுக்குப் பயன்படாமல் விழலுக்குப் பாய்ச்சிய நீராகத்தான் இருந்தன! அண்ணா பிறந்த பின்புதான் நாடகக் கலையும், நாட்டியக் கலையும், இசைக் கலையும் மறுமலர்ச்சியின் உருவம் பெற்றன! மக்களுக்கும் பயன்படத் தொடங்கின!

அறிஞர் அண்ணா பிறப்பதற்கு முன்பு தமிழகத்திலே புலவர்கள் உண்டு, வித்வான்கள் உண்டு, பண்டிதர்கள் உண்டு, நாவலர்கள் உண்டு, பாவலர்கள் உண்டு, நல்ல நாவலாசிரியர்கள் உண்டு, சிறந்த எழுத்தாளர்கள் உண்டு! ஆனால் அவர்களெல்லாம் வெறும் சத்தற்ற சக்கைகளைத்தான் படைததுத் தந்தார்கள்! அண்ணா பிறந்த பிறகு எழுத்துக்கு எழுச்சி ஏற்பட்டது, அழகு ஏற்பட்டது, கவர்ச்சி ஏற்பட்டது—எழுத்து என்னும் சொல்லுக்குப் பொருளே ஏற்பட்டது!

காலஞ்சென்ற கல்கி அவர்கள் இதை அழகாக எடுத்துச் சொல்லி இருப்பதை மாற்றார்களும் உணரவேண்டும்!

தற்காலத்தில் ஆங்கிலம் படித்த மேதாவிகளெல்லாம் "இங்கே பெர்னாட்சா இல்லையே, இப்சானில்லையே, ஷேக்ஸ்பியர் இல்லையே" என்று ஒரு குறை அழுவார்கள்! அவர்கள் அழவும் வேண்டாம், கிழவும் வேண்டாம்! இங்கேயே ஒரு இப்சான் இருக்கிறார், இங்கேயே ஒரு பெர்னாட்சா இருக்கிறார், இங்கேயே ஒரு ஷேக்ஸ்பியர் இருக்கிறார்—அவர்தான் மிஸ்டர் அறிஞர் அண்ணாதுரை யாவார்!"

இது காலஞ்சென்ற கல்கி திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் "ஓர் இரவு" நாடகத்திற்குத் தலைமை வகித்தபோது பேசியதாகும்! அவர் இதுமட்டுமல்ல அண்ணாவின் திறமையை வெகுவாகப் புகழ்ந்து நீண்டதொரு சொற்பொழிவும் செய்தார்!

இன்னும் சோமசுந்தர பாரதியார், நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதம் போன்ற தமிழ் அறிஞர்களும் மற்றுமுள்ள அரசியல் தலைவர்களும் நமது அண்ணாவின் ஆற்றலை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டி இருக்கிறார்கள்!

இந்த அறிவரசருக்குத் தான் இன்று 50 வயது பூர்த்தியாகிறது! தமிழகம் அவருக்குப் பொன் விழா நடத்தி பூரிப்பால் பெருமிதம் கொண்டு மகிழ வேண்டிய நாள் இது!

அறிஞர் அண்ணா அவர்கள் மட்டும் செட்டி நாட்டு அரசர் குடும்பத்தில் பிறந்த சீமானாக இருந்தால் இந்நேரம் நாடே அவருக்கு சொர்ணாபிஷேகம் செய்திருக்கும்!

ஒரு சீமான் 50 பொற்காசுகளைத் தந்திருப்பார்! மற்றொரு சீமான் 50 டாலர்களை வழங்கி இருப்பார்! வேறொரு சீமான் ஐம்பதாயிரத்திற்கு செக்கெழுதித் தந்திருப்பார்! டாட்டாவும் பிர்லாவும் ஓடிவந்து அண்ணாவை ஒரு தட்டில் வைத்து, மற்றொரு தட்டில் தங்கக் காசுகளை நிரப்பி எடை போட்டுத் தந்திருப்பார்கள்!

ஆனால் நமது அறிஞர் அண்ணா சீமான் வீட்டில் பிறந்து வளர்ந்த செல்லப்பிள்ளை இல்லை! அறிவுலகத்தில் பிறந்த நாவரசர்!

நாமோ ஏழைகள்! நம்மால் பொன்னாரம் சூட்ட முடியுமா? தங்க மாலைகள் அணிவிக்க முடியுமா? வைரத்தால் இழைத்த கேடயத்தை அளிக்க முடியுமா? நாம் தான் அவருக்குத் தங்கம்! அவர்தான் நமக்குத் தங்கம்!

அவர் தந்த இலட்சியம், கொள்கை நமக்கெல்லாம் தங்கம் தானே! அந்தத் தங்க நிகர் கொள்கைகளை நிறைவேற்றுவதொன்றேபோதும்—அவருக்குத் தங்கமும்வேண்டாம், கோமேதகமும் வேண்டாம்!

அவருக்கு நாம் தரவேண்டிய தங்கம், அணிவிக்கவேண்டிய பொன்னாரம் திராவிட நாடு ஒன்றுதான்! அந்தத் தங்கத்தை அளிக்க நாமெல்லாம் பாடுபட வேண்டும்! அண்ணாவின் பொன் விழாவிலே இந்த உறுதியை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்!

அறிஞர் அண்ணாவுக்கு பொன் விழா நடக்கின்ற இந்த நேரத்தில் அவர் பிறந்த நாடு அடிமையாக இருக்கிறது! அவரது வைர விழா சொந்த நாட்டில் நடை பெற வேண்டும்! இதை ஒவ்வொரு திராவிடனும் மனதிலே எண்ணி காரியமாற்ற வேண்டும்!

காங்கிரஸ்காரர்களைவிட நாம் மிக மிக பாக்கியசாலிகள்! காங்கிரஸ்காரர்களுக்கு காந்தியார் தான் கிடைத்தார்! நமக்கோ அண்ணா கிடைத்திருக்கிறார்! இவருக்கோ ஆயிரமாயிரம் தம்பிமார்களும் கிடைத்திருக்கிறார்கள்!

அண்ணாவுக்குக் கிடைத்த தம்பிமார்கள் சொத்தைகளல்ல, சோடைகளல்ல என்பதை நாம் செயல் மூலம் காட்ட வேண்டும்!

உலகத்திலேயே எந்த இனத்திற்கும் கிடைக்காத ஒரு பெரும் தலைவனை நாம் பெற்றிருக்கிறோம்! இந்தப் பெருந் தலைவன் காலத்தில் நமது இலட்சியத்தை அடையவில்லையானால் நாம் என்று தான் அந்த இலட்சியத்தை அடைவோம்! எனவே இன்று முதல் முழுமூச்சாக செயல் படுங்கள்! உடனடியாகத் திராவிடத்தைப் பெற வழி செய்யுங்கள் என்று—அண்ணாவுக்கு பொன் விழா நடக்கின்ற இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறோம்!

ஐம்பது வயதைப் பெற்று திராவிடத்தின் விடுதலைக்காக அரும்பாடுபட்டு வரும் நமது அண்ணாவுக்கு எங்கள் வாழ்த்தையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு—"மேலும் மேலும் எங்களுக்கு வீரத்தை ஊட்டுங்கள், உணர்ச்சியை ஊட்டுங்கள், விடுதலை தாகத்தை ஊட்டுங்கள், திராவிடத்தின் அடிமைத்தளையை உடைத் தெறியுங்கள்" என்றும் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம்!

அறிவே நீ வாழ்க !

அறிஞரே நீர் வாழ்க !

எங்கள் அண்ணாவே நீர் வாழ்க !

தமிழே நீ, வாழ்க !

தங்கத் தலைவரே நீர் வாழ்க!

பல்லாண்டு வாழ்க!

என, கூப்பிய கரங்களோடு அண்ணாவை வாழ்த்தி மகிழ்கிறோம்.

எல்லையிலே மானம் பறிபோகிறது !

சீன நாட்டான் உள்ளே நுழைகிறன் !

முப்படைத் தளபதிகள் ராஜிநாமா செய்கின்றனர் !

இந்தியா பெரும் கொந்தளிப்பில் சிக்குண்டு கிடக்கிறது !

இதைப்பற்றிக் கவலைப்படவில்லை! உலகம் சிரிக்குமே என்று அஞ்சவில்லை!

தி. மு. க. தோற்றதற்கு கும்மாளம் போடுகிறீர்கள் !

வெற்றி வெறி பிடித்து களியாட்டம் ஆடுகிறீர்கள்!

அறிஞர் அண்ணு எழுப்பும் வீரகர்ஜனை !

[அறிஞர் அண்ணு 2-9-59-ம் தேதி ஏழு கிணறு எம். ஜி. ஆர். இரவுப் பள்ளி ஆண்டு விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய சொற்பொழிவு! ஒரு வார்த்தை கூட விடுபடாமல் திரட்டித் தரப்படும் முழு பேச்சாகும்!]



அன்புமிக்க தலைவர் அவர்களுக்கும், தோழர்களுக்கும் எனது வணக்கம். இந்த வட்டத்திலே தி. மு. க. தோழர்களால் கூட்டப்படும் இந்தக் கூட்டத்தைக் கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சி யடைகிறேன்! இந்த இடத்திலே ஏற்ற வசதி இல்லாதிருந்தும் இப்படிப்பட்ட மாபெரும் கூட்டத்தைக் கூட்டியதைக் கண்டு நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன், இவ்வளவு வசதி இல்லாத இடத்தை கூட்டம் கூட்டுவதற்காக ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்று இன்று மாலை விசாரித்ததில்— சுமார் ஒரு திங்களுக்கு முன்னர் இதே இடத்தில் காங்கிரஸ்காரர்களால் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் நமது நிதியமைச்சர் சுப்பிரமணியம் நம்மைப்பற்றி தாறுமாருகப்பேசிவிட்டு சென்றதாகவும், அதற்கு நான் வந்து பதில் சொல்ல வேண்டுமென்பதற்காகவுமே இப்படிப்பட்ட வசதி இல்லாத இடத்தைத் தேர்ந்தெடுத்ததாகவும் என்னிடம் நமது தோழர்கள் கூறினுர்கள்! மக்கள் நம்மிடம் காட்டுகின்ற ஆர்வத்திலிருந்து நம்முடைய கட்சிக்கு மக்களின் ஆதரவு எவ்வளவு இருக்கின்றதென்பதை யூகமுள்ள காங்கிரஸ்காரர்கள் அறிவார்கள்!

நாம் புதுச்சேரியிலே தோற்றுவிட்டதைக்கண்டு உற்சாகமடைந்துள்ளார்கள் காங்கிரஸ்காரர்கள்! தோல்வி என்பது ஒரு கட்சியின் மதிப்பை எடைபோடுவதல்ல! வெற்றிதோல்வி இரண்டையும் கண்டு ஒரு கட்சியைப்பற்றி நிர்ணயித்து விட முடியாது! இங்குமங்கும் நடக்கும் தேர்தலின் முடிவைக்கண்டு ஒரு கட்சியைக் கலைத்து விடமாட்டார்கள்! கழகம் தேர்தலிலே வெற்றி பெருவிட்டால் அதனுலே நமது கழகத்தைக் கலைத்துவிட வேண்டுமா? கொள்கைதான் முக்கியமேதவிர வெற்றி தோல்வி யென்பது சாதாரண விஷயம்! புதுவையிலே தோற்றுவிட்ட பின்பும் தி. மு. க. விற்கு இப்படிப்பட்ட ஆதரவு இருப்பது எப்படி இருக்கிறது என்றுல்—கூந்தலிலே பூச்சூடாத மங்கையொருத்தி வரும்போதே மணம் வீசுகிறதென்றுல் அவள் கூந்தலிலே பூச்சூடி வருவாளானுல் எவ்வளவு மணம் இருக்கும்; அதுபோல மக்களின் ஆதரவு தி. மு. க. விற்கு இருக்கிறது!

சென்னை கார்ப்பரேஷன் தேர்தலிலே தோல்வியுற்றகாங்கிரஸ்காரர்களுக்கு நாம் புதுவையிலே தோற்றது சிறிது உற்சாகத்தை கொடுத்திருக்கின்றதென்றே கூறலாம்!

சென்னை கார்ப்பரேஷன் தேர்தலிலே காங்கிரஸ் தோற்ற போது முதலமைச்சர் காமராஜர் உதகையிலே ஒரு கூட்டம் கூட்டி காங்கிரஸ்காரர்களையெல்லாம் வரவழைத்தார்! அவர்களையெல்லாம் கார்ப்பரேஷன் தேர்தலிலே காங்கிரஸ் தோற்றதற்கு காரணம் என்னவென்று மனம் விட்டுக் கூறும்படிக் கேட்டார்! எல்லோரையும் மனம் விட்டுப் பேசும்படிச் சொன்னுர்! காரணம் எதுவானுலும் ஒளிவு மறைவின்றி சொல்லச் சொன்னுர்! காங்கிரஸ் தோற்றதற்கு, தான் தான் காரணமென்றுலும் அதையும் மறைக்காமல்—பயப்படாமல் சொல்லச் சொன்னுர்! மற்ற மந்திரிகள் காரணமாக இருந்தாலும் சொல்லச் சொன்னுர்! அப்பொழுது ஒருவர் சொன்னுர்—"அழுகும் பொருள்களுக்கு வரி போட்டோம் — அதனுல்தான் நாம் தோற்ருேம்" என்று சொன்னுர்! மற்ருெருவர் சொன்னுர்—'உணவுப் பொருள்களின் விலைவாசி விஷம் போல ஏறிக்கொண்டே போகிறது—அதை நாம் தடுத்து நிறுத்தவில்லை — அதனுல்தான் நாம் தோல்வியுற்ருேம்"! இன்ருெருவர் சொன்னுர் — "வியாபாரிகளுக்கு விற்பனைவரி போட்டோம்—அவர்கள் எல்லாம் நமக்கு வேம்பு கோலாயினர் அதனுல்தோல்வியுற்ருேம்" என்ருர்! மற்ருெருவர் சொன்னுர்— "படித்தவர்கள் எல்லாம் நமக்கு ஓட்டுப் போடவில்லை—அதனுல் நாம் தோற்ருேம்" என்ருர்!

புதுவையிலே நாம் தோற்ற பிறகு தான் அவர்கள் சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில்பெற்ற தோல்வியை சற்று மறந்து உற்சாகமாக உள்ளார்கள்! இது எப்படி இருக்கிறதென்றுல் தீபாவளிப் பண்டிகையின் போது பக்கத்து வீட்டுப் பையன்கள் பட்டாசு கொளுத்துவதைப் பார்த்து என் வீட்டுச் சிறுவனும் பட்டாசு வாங்கிக் கொடுக்கும்படி சொல்வான்—நாங்கள் எல்லாம் பெரியார் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாதலால்தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவதில்லை —அதனுல் எனது பையனைப் பார்த்து நாம் தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவது கிடையாது — அதனுல் இந்தப் பண்டிகையின் போதுபட்டாசு நாம் கொளுத்தக்கூடாது என்பேன்! அதற்குப் பையன் "பட்டாசு வாங்கிக் கொடுங்கள் — இப்பொழுது கொளுத்தவில்லை— தீபாவளி போனபிறகு கொளுத்துகிறேன்" என்பான்! சரியென்று நாங்களும் அவனுக்கு பட்டாசு வாங்கிக் கொடுப்போம்! — பையனும் தீபாவளி போன பிறகு பட்டாசை கொளுத்துவான, தீபாவளி போனபிறகு கொளுத்தும் பட்

(4-ம் பக்கம் பார்க்க)

விந்தை மிகு மொந்தைக்கள் தந்த அருள் உங்களைக் காப்பாற்றியது ! நினைவிருக்கட்டும் !

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டாசைப் போலிருக்கிறது காங்கிரஸ்காரர்கள் புதுவைத் தேர்தல் வேற்றியைக் கொண்டாடுவது!

ஒரு இயக்கம் போட்டியிடும் இடங்களில் எல்லாம் வெற்றி பெற்றுவிடும் என்று சொல்லிவிட முடியாது. ஒரு இயக்கம் ஒரு தேர்தலில் தோற்று விட்டால் உடனே அந்த இயக்கத்தைக் கலைத்துவிடவேண்மென்பதில்லை! பண்டாரங்கள், பரதேசிகள் கூட இம்மாதிரியான காரியத்தை செய்துவிட மாட்டார்கள். பண்டாரம் ஒருவன் ஒரு வீதிக்குச் சென்று வீடு வீடாகச் சென்று பிச்சை கேட்கிறான்! அந்தத் தெருவிலே ஒருவரும் பிச்சை போடவில்லை. ஒருவரும் பிச்சை போடவில்லையே என்று உடனடியாகத் தன்னிடமுள்ள திருவோட்டைப் போட்டு உடைத்து விடமாட்டான்! ஒரு தெருவிலே பிச்சை போடாவிட்டால் இன்னொரு தெருவிலே சென்று கேட்டுப் பார்ப்போமேயென்று வேறு தெருவிற்குச் சென்று பிச்சை கேட்பானே தவிர திருவோட்டைப் போட்டு உடைத்துவிட மாட்டான்! அதுபோல புதுவைத் தேர்தலிலே தோற்று விட்டோமேயென்று கட்சியையா கலைத்துவிடுவோம்? கட்சியில் மக்களை சேர்ப்பதற்குதான் பார்ப்போம்!

சத்தியமூர்த்தி காலத்திலே கார்ப்பரேஷனிலே நுழைய காங்கிரஸ் பட்ட பாடும், கெட்ட கேடும் அடைந்த தோல்வியும் எவ்வளவு? ஏன் நம்முடைய கண் முன்னாலேயே செங்கல்வராயன் ஒரு தடவைக்கு இரு தடவை தேர்தலிலே நின்றார். தோல்வியுற்றார். இரண்டு தடவை தேர்தலிலே தோல்வியுற்றோமே என்று அடுத்த தேர்தலுக்கு நிற்காமலா இருப்பார்? அடுத்த தடவை பொன்னேரியில் நிற்கலாமா, திருவள்ளூரிலே நிற்கலாமா என்றுதான் யோசனை செய்து கொண்டிருப்பார்! இந்த காலத்திலே தாலியறுத்த பெண்களுக்கே மறு கல்யாணம் உண்டென்று சொல்லும் போது ஒரு கட்சி தேர்தலிலே தோற்றுவிட்டால் அது கலைத்தாவிடப்படும்?

என்னிடம் தோழர்கள் பலர் வந்து 'என்ன அண்ணா உங்களை இப்படியெல்லாம் திட்டுறார்கள் —நீங்கள் சும்மா இருக்கிறீர்களே'' என்பார்கள்! அவர்களை அமைதியாக உட்காரச் செய்து என்னதான் திட்டினார்கள் — சொல்லுங்களேன் என்று கேட்டு, அவர்கள் சொல்லுவதையெல்லாம் கேட்டால் என்னைப் பொறுத்தவரை அவர்கள் சொன்னதெல்லாம் திட்டாகப் படுவதில்லை! என்ன திட்டுகிறார்கள். அண்ணாதுரையும் கருணாநிதியும் சினிமாவிற்கு கதையெழுதி பணம் சம்பாதிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள்! இப்படிச் சொல்லுவதில் என்ன ஆகிறது? மேலும் மேலும் அதிக பட முதலாளிகள் என்னிடம் வந்து கதை எழுதித் தரும்படிக் கேட்கிறார்கள்! இதனால் பட மார்க்கெட் உயருகிறது! என்னுடைய கதைகளுக்கு அதிகப் பணம் வருகிறது! இப்படி அவர்கள், எனக்கும், படமுதலாளிகளுக்குமிடையே கமிஷன் இல்லாத ஏஜண்டுகளாக இருக்கிறார்கள்!

வேறு என்ன சொல்கிறார்கள். அண்ணாதுரை குள்ளமான ஆள் என்று கூறுகிறார்கள். இதைக் கேட்பவர்களுக்கு என்ன ஏற்படுகிறது? ''என்ன அண்ணாதுரை குள்ளமான ஆளா? குள்ளமான ஒரு ஆளா இவ்வளவு பெரிய கட்சியை வைத்துக்கொண்டிருக்கிறான்! சரி ஆளைப் பார்க்கத்தான் வேண்டும்! அண்ணாதுரை பேசும் அடுத்த கூட்டம் எங்கு நடைபெறப் போகிறது? மண்ணடியிலா? அங்கு போய் அந்த ஆளைக் சட்டாயம் பார்க்கவேண்டும்'' என்று என்னைப் பார்க்காதவர்களும் பார்க்க வருகிறார்கள்! இதனால் என்னுடைய கூட்டத்திற்கு அதிகமான ஆள் சேர்த்துத் தருகிறார்கள்.

இன்னும் என்ன சொல்கிறார்கள்—அண்ணாதுரை ரோமாபுரி ராணிகள் என்ற புத்தகத்தை எழுதியுள்ளார் என்று கூறுவார்கள்! இதைக் கேட்டவுடனே கூட்டத்திலே இருப்பவருக்கு என்ன ஏற்படுகிறது! நரம்புகளெல்லாம் முறுக்கேறுகிறது. அந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படுகிறது! "எப்போதடா கூட்டம் முடியப் போகிறது—வீட்டுக்குப் போய் சாப்பிட்டு விட்டு அந்தப் புத்தகத்தைப் படிப்போம்" என்ற ஆவல் ஏற்படுகிறது! இதனால் அந்தப் புத்தகம் மேலும் மேலும் விற்பனையாகிறது. இதுவரை அந்தப் புத்தகம் ஒன்பது பதிப்புகள் போடப்பட்டுள்ளது. இப்படி அந்தப்புத்தகம் போடுபவருக்கு மேலும் மேலும் லாபத்தைச் சம்பாதித்துக் கொடுக்கின்றனர்.

சந்தனக் கட்டையை அரைக்க அரைக்கத்தான் அதிகமணமேற்படும். பந்தை உதைக்க உதைக்கதான் உயர எழும்பும். அதுபோல அவர்கள் திட்ட திட்டத்தான் நமது புகழ் மேலும் மேலும் பரவும்!

அவர்கள் திட்டுவது என்னைச் சிறிது பாதிக்கவில்லை. ஏனென்றால் சிறிய வயது முதல் திட்டுகளை வாங்கி வாங்கி பழக்கப் பட்டவன். நான்! நான் பெரிய மாளிகையிலே பிறக்கவில்லை! சின்ன விட்டிலே பிறந்தவன்! அதிலும் ஓட்டு வீட்டிலே பிறந்தவன்! என்னை அனைவரும் திட்டக் கூடும் அந்தத் திட்டுகளையெல்லாம் கேட்டுக்கேட்டுப் பழகிப் போனவன் நான்.

நான், எனது சிறிய வயதில் இந்த வட்டத்திலே இருந்தவன். இந்த வட்டத்திலே இருக்கும் புதிய பயில்வானையும் தெரியும். பழைய பயில்வானையும் தெரியும்! போலீஸ் பலத்தை வைத்துக் கொண்டு பயில்வானாக இருக்கும் பயில்வானையும் தெரியும்!

இதோ எதிரேயுள்ள தெருவில் நேரில் சென்றால் அங்கே ஒரு ஓட்டல் இருக்கும். நான் எனது சிறிய வயதில் இரவிலே அந்த ஓட்டலுக்கு வந்துதான் உ சாபிடுவது வழக்கம்! இப்போது புதியதாக மேடைமீது ஏறிப் பேசும் பல காங்கிரஸ்காரர்கள் அப்போது பம்பரம் ஆடிக் கொண்டிருப்பார்கள்!

உங்களுக்கு என்மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தால் காங்கிரஸ்காரர்கள் திட்டுவதை பற்றிக் கவலைப்படாதீர்கள்! காங்கிரஸ்காரர்கள் திட்டுகிறார்கள் என்றால் அதற்குப் பதிலுக்குப் பதில் திட்டுவது அவ்வளவு அழகாக இல்லை! நான் கூட நேருவைத் தாக்கிப் பேசுகிறேன்! அவரைப் பிடிக்கவில்லை என்று சொல்லவில்லை! அதனால் அந்தக் கொள்கைகளைத் தாக்கிப் பேசுகிறோம்! அதைவிட்டு இழிவாக பேசுவது எனக்குப் பிடிக்காது! நான் முன்பு ஒரு சமயம் மேடையில் பேசும் போது தோழர்கள் "காங்கிரஸ்காரர்களை கார சாரமாகத் தாக்கிப் பேசவேண்டு"மென்று கேட்டனர்! நானும் அதைமனதில்வைத்துக்கொண்டு காங்கிரஸ்காரர்களை கொல்லைச் சரக்காலே அபிஷேகம் செய்து கூட்டுச் சரக்கை அவர்களுக்குப் படைக்கவேண்டுமென்று கூறினேன்! இதன் அர்த்தம் எவ்வளவு அசங்கியமாக இருக்கிறது!

இப்படிப் பேசியதைப்பற்றி பின்னர் நான் எண்ணிப் பார்த்த போது "அடடா என்ன மட்டரகமாகப்பேசிவிட்டோம்' என்று நினைத்தேன். நாம் நமது கொள்கைகளை பரப்புவதில் நாட்டம் இருக்க வேண்டுமே தவிர எதிர் கட்சியினரை மட்டரகமாகத் தாக்கிப் பேசுவதில் நமது கவனத்தை செலுத்தக் கூடாது.

(5-ம் பக்கம் பார்க்க)

ஜாலக்கு! வெறும் ஜாலக்கு !!

இந்தியத் துணைக் கண்டத்தின் முதலமைச்சர் திரு. பண்டித ஜவகர்லால் நேரு—'இந்தி பேசாத, இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத மற்றவர்கள் மீது இந்தியைத் திணிக்க மாட்டோம்' என்று டில்லி மக்கள் சபையில் உறுதிமொழியளித்திருக்கிறார்!

"இந்தியை ஆட்சி மொழியாக்கினால் இந்தி மொழி பேசாத மற்றவர்களுக்கு நிச்சயமாக இடர்கள் ஏற்படத்தான் செய்யும்" என்றும் கூறி இருக்கிறார்!

"இந்தி மொழியை எந்த மாநிலம் வெறுத்தாலும் அங்கு நிச்சயமாகப் புகுத்த மாட்டோம்" என்றும் பேசி இருக்கிறார்!

ஆனால் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத், உள்நாட்டு அமைச்சர் பந்து முதலியவர்கள் "இந்தியை எப்படியும் 1965-ம் ஆண்டுக்குள் ஆட்சி மொழியாக்கி விட வேண்டும்" என்று பேசி வருகிறார்கள்! நாம் எதை நம்புவது என்றுதான் புரியவில்லை!

"இந்தி மொழியைத் திணிக்க மாட்டோம், திணிக்க மாட்டோம்" என்று பண்டிதர் கூறிவருகின்ற நேரத்தில்தான் மைல் கற்களில் இந்தி எழுதப்படுகிறது, மணியார்டர் கூப்பன்களில் இந்தி அச்சடிக்கப்படுகிறது, அஞ்சல் அட்டைகளில் இந்தி புகுத்தப்படுகிறது! சுருக்கமாகச் சொன்னால் எல்லா துறைகளிலும் இந்திக்கு முதலிடம் தரப்பட்டிருக்கிறது!

இந்த நிலையில் பண்டிதரின் வார்த்தையை நாம் எப்படி நம்புவது? தென்னாட்டு மக்களை தாஜா செய்வதற்காக நேரு ஜாலக்கு செய்கிறார் என்று தானே நினைக்க வேண்டி இருக்கிறது!

உண்மையில் இந்தி மொழியை தென்னாட்டு மக்கள் மீது புகுத்த விரும்பவில்லை என்றால் அரசியல் சட்டத்திலுள்ள இந்தி மொழி ஷரத்துகளை ரத்து செய்து விட்டு உறுதி மொழியளிக்கலாமே! பண்டிதர் இதை செய்திட முன்வருவாரா?

அரசியல் சட்டத்தில் இந்தி தான் அரசியல் மொழி என்று விதி இருக்கிற வரையில் நேருவின் பேச்சை எள்ளவும் நம்ப முடியாது! நிச்சயமாக நம்ப முடியாது!

தோற்று விட்டால் கட்சியைக் கலைத்து விட வேண்டுமா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதோ எதிரில் உள்ள சத்திய மூர்த்தி சங்கத்தில் அவரது படத்தை அலங்கரித்து வைத்திருக்கின்றனர். நான் நாடகமாடுகிறேன் என்று சொன்னார்களே காங்கிரஸ்காரர்கள் — காலஞ்சென்ற சத்தியமூர்த்திகூட நாடகத்தில் நடித்திருக்கிறார் என்பது தெரியுமா? சத்தியமூர்த்தி கூடத்தான் நாடகத்தில் புருஷோத்தமர் வேடத்திலே தோன்றியுள்ளார்! சத்திய மூர்த்தி என்ன, காலஞ்சென்ற ஆந்திர கேசரி பிரகாசம் கூடத்தான் சாரங்கதராவில் சித்ராங்கியாக — பெண் வேடம் தரித்து நாடகத்திலே நடித்துள்ளார்! இவையெல்லாம் உள்நாட்டுச் சரக்குதானே என்று சொல்லலாம்! ஏன்? சீனாவின் பிரதமர் சௌ என் லாய் கூடத்தான் பெண் வேடம் போட்டுக் கொண்டு நாடகத்திலே நடித்துள்ளார்!

காங்கிரஸ்காரர்கள் நான் நாடகத்தில் ஆடுவதைப்பற்றி கேவலமாகப் பேசுவதைப்பற்றி சத்தியமூர்த்தி உயிரோடு இருந்தால்என்ன சொல்லுவார்? ஆனால் அவர் உயிரோடு இல்லை. அப்படியானால் அவரது படத்திற்கு மேலே அவரது ஆவி சுற்றிக்கொண்டிருப்பதாக வைத்துக்கொண்டு அந்தஆவி பேசுவதாக வைத்துக் கொள்வோம். அந்த ஆவி என்ன கேட்கும்? "அடபாவிகளே என்னுடைய படத்தையும் மாட்டிக்கொண்டு நான் ஆடிய அதே நாடகத்தில் ஆடுகின்றஒருவனைப் பழித்தும் பேசுகின்றீர்களே! இது நியாயமா? என்னைப்போல நாடகத்தில் ஆடும் ஒருவனைப் பழித்துப் பேசுவது என்னைப் பழித்துப் பேசுவது போலல்லவா என்றுதானே அந்த ஆவி கேட்கும்!

தி. மு. க. புதுச்சேரி தேர்தலிலே ஏன் தோற்றது? காங்கிரஸ்காரர்கள் சென்னையிலே தோற்றதற்கு என்ன காரணம் சொன்னார்கள்? "சென்னையிலே கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் எல்லாம் தி. மு. க. விற்கு ஓட்டு போட்டார்கள். அதனால் தி. மு.க. சென்னையிலே வெற்றி பெற்றது" என்று கூறினார்கள்! அது உண்மையா பொய்யா என்றெல்லாம் ஆராய வேண்டிய அவசியமில்லை! அப்படிச் சொல்லியது அறியாமையா? அப்படிக் கூறியது ஒரு பெரிய தலைவனுக்கு அழகுதானா? என்றெல்லாம் கூட ஆராய வேண்டிய அவசியமில்லை! ஆனால் காங்கிரஸ் புதுவையிலே வெற்றி பெற்றதற்குக் காரணம் என்னவென்று கேட்டால் சென்னையிலே தி.மு.க. வெற்றி பெற்றதற்குக் காரணம் என்னவென்று காங்கிரஸ்காரர்கள் கூறினார்களோ அதே காரணத்தைத்தான் புதுவையிலே காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்றதற்கு உண்மையான காரணமாகக் கூறலாம்!

புதுச்சேரியிலும்காரைக்காலிலும் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலே காமராஜர் மக்களிடம் என்ன சொல்லி வாக்குக் கேட்டார்? நீங்கள் காங்கிரஸிற்கு ஓட்டுபோடுவதால் கள்ளுகடைகளும்சாராயக் கடைகளும் மூடப்பட்டுவிடும் என்று நினைக்க வேண்டாம்! கள்ளுக்கடைகளும் சாராயக்கடைகளும் திறந்தே இருக்கும், அதனால் நீங்கள் எந்த பயமுமின்றி காங்கிரஸிற்கு ஓட்டு போடலாம்" என்று தானே கூறினார்!

புதுச்சேரியிலே தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னர் தான் நமது மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு கடைசி நேரத்தில் நான் காரில் சென்று கொண்டிருந்தேன்! மாநாடு நடக்கும் இடம் தெரியாத காரணத்தால் அங்கே ஓர் இடத்தில் சென்று மாநாடு எங்கே நடக்கிறது என்று கேட்டேன்! "அதோ" என்று ஒரு இடத்தைக் காட்டினார்கள்! அந்த இடத்திற்கு சென்ற போது அங்கே ஒரு கள்ளுகடை இருந்தது! அந்த இடத்தில் மாநாடு எங்கே நடக்கிறது என்று கேட்டதில் "அதோ" என்று இன்னொரு இடத்தைக் காட்டினார்கள்! அந்த இடத்திற்கு சென்று பார்த்த போது அங்கே ஒரு சாராயக் கடை ஒன்றின் பக்கத்தில் இந்த மைதானத்தில் மாநாடு நடைபெறுவதைப் பார்த்தேன்! இதையெல்லாம் பார்த்தவுடனேயே இந்த ஊரில் நமக்கு ஓட்டு எங்கே கிடைக்கப்போகிறது என்று சொன்னேன்.

எந்த மதுவிலக்கை காமராஜர் ஆதரித்து வருகிறாரோ அந்த மதுவிலக்கை புதுச்சேரியிலே அமுல் செய்யப் போவதில்லை என்று சொல்லி காமராஜர் மக்களிடம் ஓட்டுக் கேட்டார்! இதைப் பார்த்தால் காந்தி என்ன சொல்லியிருப்பார்? காந்தியார் இல்லை! அவருடைய ஆவி பேசுவதாக வைத்துக் கொள்வோமேயானால் அந்த ஆவி என்ன சொல்லும்? "ஐயோ எந்த மதுவிலக்கிற்காக நான் கடைசி வரை போராடினேனோ அந்த மதுவிலக்கை அமுல் செய்ய மாட்டோம் என்று கூறுகிறீர்களே! எந்த மதுவிலக்கிற்காக நான் சிறை சென்றேனோ அந்த மது போகாது என்று சொல்லுகிறீர்களே! எந்த மதுவிலக்கிற்காக ஆயிரமாயிரம் தொண்டர்களை சிறைக்கு அனுப்பினேனோ அந்த மதுவிலக்கை புதுவையிலே அமுல் செய்ய மாட்டோம் என்று கூறுகிறீர்களே! இது நியாயந்தானா?" என்றெல்லாம் அல்லவோ காந்தியாரின் ஆவி கேட்கும்.

புதுவையிலே காங்கிரஸ் பெற்றது 66,000 ஓட்டுகள்! நாம் பெற்றவை 11 ஆயிரம்! கம்யூனிஸ்டுகள் பெற்றவை 55 ஆயிரம்! சுயேச்சைகள் ஆறாயிரம்! காமராஜரும், குபேரும் தங்களது கொள்கைகளை காற்றில் பறக்க விட்டு பெற்ற ஓட்டுகள் 66 ஆயிரம்! நாம் பெற்ற ஓட்டுகள் 11 ஆயிரம்! நாம் பெற்ற வாக்குகள் அப்பழுக்கற்ற பாலைப் போன்றது!

கம்யூனிஸ்டுகளும் நாங்களும் ஒன்று கூடிப் பேசி காங்கிரசை எதிர்த்திருந்தால் உங்கள் கதி என்ன ஆகி இருக்கும்? நினைத்துப் பாருங்கள். அந்த நேரத்திலே கம்யூனிஸ்ட் தலைவர்களை நாங்கள் சந்தித்துப்பேச சந்தர்ப்பம் கிடைக்காமல் போய் விட்டது! காரணம் அந்த நேரத்தில் கேரளத்தில் கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது! கம்யூனிஸ்ட் தலைவர்கள் எல்லாம் அதிலே ஈடுபட்டிருந்த காரணத்தால் அவர்களை சந்தித்துப் பேச முடியாமல் போயிற்று!

உள்ளபடியே சொல்லப் போனால் கடலிலே வலை வீசிய நேரத்திலே பெரிய பள்ளம் இருந்த காரணத்தால் தப்பி வந்த மீனைப போன்றவர்கள் நீங்கள் என்று சொல்லலாமே தவிர வலையை அறுத்துக் கொண்டு வந்த பெரிய கெண்டையோ அல்லது வராலோ என்று சொல்லி விட முடியாது!

காரைக்காலிலே தேர்தலுக்கு முன்னர் ஒரு மாநாடு கூட்டினோம், அதிலே கிடைத்த பணத்தைத் தேர்தலுக்காகசெல வழித்தோம்! காமராஜரை மீறி குபேரை மீறி பதினோராயிரம் வாக்குகளைப் பெற்றோம்! இதில் ஒன்றும் எங்களுக்கு நஷ்டமில்லை.

8-ம் பக்கம் பார்க்க

மார் தட்டும் மாடோட்டிப் பையன்கள்!

புதுச்சேரி தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறாமல் தோல்வியடைந்ததைக் கண்டு சென்னையில் சில மாடோட்டிப் பையன்கள் மார்த்தட்டிக் கொண்டு அலைவதாகக் கேள்விப்படுகிறோம்!

"புதுச் சேரியிலே தோல்வி கண்ட இவர்களுக்கு பூவிருந்த வல்லியில் கருமாதியா?" என்று போஸ்டர் அடித்து சுவரெங்கும் ஒட்டி ஓங்காரக் கூச்சல் போட்டு மகிழ்ந்து வருகிறார்களாம்! இதைப் பார்த்து விட்டு நமது இளைஞர்கள் நமக்குக் கடிதமெழுதி "நல்ல பதில் கொடுங்கள்" என்று சொல்லுகிறார்கள்!

அரசியல் தெரியாத பையன்களிடம் நமக்கேன் வீராப்பு! பெரியவர்கள் ஏதோ ஒரு சில லாபத்தைக் கருதி மாடுகள் பின்னால் போகிறார்கள் என்பதை அறியாமல் பையன்களும் மாடுகளைத் துரத்திக் கொண்டு அலைகிறார்கள்! ஒழிந்து போகட்டும்!

அரசியல் தெரிந்து வருங்காலத்தைப்பற்றி சிந்திக்கும் திறன் படைத்த பையன்களாக இருந்தால் இப்படியெல்லாம் விளையாட்டு வேலையில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள்!

உணவு மந்திரி ராஜினாமா செய்தார்! அதைப் பற்றி கவலைப்பட்டிருப்பார்கள்!

சீன நாடு இந்திய நாட்டை கபளீகரம் செய்ய முயன்று கொண்டு வருகிற நேரத்தில் பாதுகாப்பு மந்திரியும், தளபதியும் ராஜினாமா செய்தார்கள்! அதைப் பற்றி இந்தப் பையன்கள் கவலைப்பட்டிருந்தால் உண்மையான தேச பக்தர்கள் என்று நினைக்க முடியும்!

ஊர் பற்றி எரியும் போது 'ராக்-என்-ரோல்" நடனம் செய்து களியாட்டம் புரியும் பையன்களைப் பற்றி நாம் கவலைப்பட முடியுமா?

இந்தப் பையன்கள் மீது கூட குற்றமில்லை! நூலைப் போலத் தானே சேலையிருக்கும்! தாயைப் போலத்தானே பிள்ளைகளும் இருப்பார்கள்! எனவே தாய் எட்டடித் தாண்டினால் குட்டிகள் பத்தடித் தாண்டுகின்றன! தாண்டிக் கொண்டு இருக்கட்டும்! நன்றாகத் தாண்டிக் கொண்டிருக்கட்டும்! அதில் நமக்கென்ன நஷ்டம்!

புதுச்சேரிக்கு மட்டும்தானா தேர்தல்?. மற்ற இடங்களுக்குத் தேர்தல் வரவே வராதா? அப்போது பார்த்துக் கொள்வோமே! குடம் தூக்கி கொள்ளி வைக்க காமராஜரை அனுப்புகிறார்களா?, பக்தவத்சலத்தை அனுப்புகிறார்களா?. அல்லது திறமையின் திரு உருவமான சுப்பிரமணியத்தையே அனுப்பி வைக்கிறார்களா, என்பதைப் பொருத்திருந்துப் பார்ப்போம்!.

முன் கதைச் சுருக்கம்

தென்னகம் வடவர் பிடியில் சிக்குண்டுத் தவிப்பதைக் கண்ட வீர மறவர் குலத்து இளைஞன் வீரபாண்டியன் ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு டில்லி செங்கோட்டையை முற்றுகையிடப் புறப்படுகிறான்! படை சோழபுரத்து எல்லையைக் கடந்து கொண்டிருக்கும் போது ஒரு பெண் இறைக்க இறைக்க ஓடி வருகிறாள்! "போகாதீர்கள், ஆபத்து! போகாதீர்கள் ஆபத்து" என்று தடுக்கிறாள்! பாண்டியனோ அப்பெண்ணின் பேச்சைத் தட்டி விட்டு தன் படையை மேலே செலுத்திக் கொண்டு செல்லுகிறான்!

சிறிது நேரத்திற்கெல்லாம் போலீஸ் படை வீரபாண்டியனுடைய படையை வளைத்துக் கொண்டு விடுகிறது! போலீஸ் அதிகாரி அருமை நாயகம் வீர பாண்டியனுடைய படையை கலைந்து போகும்படிச் சொல்லுகிறார்! போலீஸ் அதிகாரியின் கட்டளைக்கு தாள் பணிய அப்படையும், அப்படைத் தளபதி வீரபாண்டியனும் மறுக்கவே போலீசார் துப்பாக்கிப் பிரயோகமும் செய்கின்றனர்! பலர் உயிர் துறக்கின்றனர்!

பாண்டியன், வேலழகன், முத்தழகன் இம்மூவரையும் கைது செய்து சிறைக்கனுப்பப்படுகிறது! சிறைச்சாலையில் அந்தப் பெண் வந்து சந்தித்து மறுநாள் விடுவிப்பதாகச் சொல்லி விட்டு வீடுதிரும்புகிறாள்! பாண்டியனை விடுவிப்பதாகக் கூறிய அந்தப் பெண் வேறு யாருமில்லை! போலீஸ் அதிகாரி அருமை நாயகத்தின் அருமைப் புதல்வி வேல்விழி தான்!

ஆத்தூர் ஜமீந்தார் குணசேகரம் பிள்ளை ஒரு அரைப் பைத்தியம்! அந்த அரைப் பைத்தியத்திற்கு வேல்விழி மீது ஒரு கண்! இதை வேல்விழி பயன்படுத்திக் கொள்ளுகிறாள்! நாடாளும் மந்திரியைத் தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்றும், அப்படி செய்யவில்லையானால் திருமணம் நடந்த மறு நாளே தன் கணவன் இறந்து விடுவான் என்றும், இது தன்னுடைய ஜாதகம் என்றும் கூறுகிறாள்! அதனால் குணசேகரம் பிள்ளையை மந்திரியாக்குவதாகவும், அதற்கு தியாகம் புரிய வேண்டுமென்றும். இதற்கு ஜெயிலுக்கு போக வேண்டுமென்றும் குணசேகரம் பிள்ளையிடம் கூறுகிறாள்! அந்த அரைப் பைத்தியமும் ஜெயிலுக்கு புறப்பட்டு விடுகிறது!

பின்னர் ஏதோ தந்திரத்தால் பாண்டியனை மீட்கிறாள்! பாண்டியனும் வேல்விழியும் ஊர் திரும்புகையில் இரவாகி விடுகிறது! எனவே ரங்கநாதபுரம் எஸ்டேட் எஜமானி ரங்கநாயகி அம்மாள் வீட்டில் தங்குகிறார்கள்! பாண்டியனுடைய அழகில் மயங்கி மனதைப் பறிகொடுக்கிறாள் ரங்கநாயகி! இதற்கு வேல்விழி தடைக்கல் அல்லவா? எனவே வேல்விழியைத் தொலைத்துக் கட்டிவிட எண்ணி தன் ஆசைநாயகன் சுந்தரம் தூங்கிய பின்பு வேல்விழியை கொலை செய்ய ஒரு கொடுவாளைத் தூக்கிக் கொண்டு வருகிறாள்! மனம் போராடிக்கொண்டிருக்கிறது!

x x x

ரெங்கநாயகி மெல்ல மெல்ல வேல்விழி படுத்திருக்கும் பக்கம் செல்லுகிறாள்! ஒரு பக்கத்திலே பயம்! மறுபக்கத்திலே பாண்டியனுடைய பாசம்! அவளை வாட்டி வதைத்துக் கொண்டே இருந்தது! கொடுவாளை ஓங்குவதும், பிறகு நிறுத்துவதுமாகவே இருந்தாள்! கைகளும், கால்களும் நடுங்க ஆரம்பித்தன! இந்தத் தரம் வேல்விழியின் தலை துண்டமாகி விடும் என்ற உறுதியோடு கொடுவாளை உயரே தூக்கினாள்! அச்சத்தால் கை நடுங்கி கொடுவாளை கீழே போட்டு விட்டாள்! கொடுவாள் வீழ்ந்த சப்தம் பாண்டியனை உறக்கத்திலிருந்து எழுப்பி விட்டது! "திருடன்! ஐயோ திருடன்" என்று கத்த ஆரம்பித்தான்! ரங்கநாயகி வெலவெலத்துப் போய் உள்ளே ஓடி படுக்கையில் படுத்துக் கொண்டு விடுகிறாள்! மீண்டும் பாண்டியன்—"திருடன், திருடன்" என்று கத்துகிறான்! உள்ளே படுத்திருந்த சுந்தரம் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தான். விளக்கைப்போட்டான்! சுந்தரத்திற்கு ஒரே திகைப்பு! ஆச்சரியத்தில் மூழ்கினான்! "யார் வேல்விழியா? இங்கே எங்கே வந்தாள்! பக்கத்தில் இருப்பவன் யார்?" சுந்தரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை! பத்து விநாடி வரை கல்லைப் போல் ஆடாமல், அசையாமல் வேல்விழியைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டே இருந்தான்!

"எங்கே வந்தாய் வேல்விழி? எதற்காக வந்தாய் வேல்விழி" என்று ஆத்திரத்தோடு சுந்தரம் கேட்டான்?

"உங்களைத் தேடித்தான் வந்தேன்! வரக் கூடாதா?" வேல்விழியின் பேச்சில் கேலி கலந்திருந்தது!

"இங்கேயா? என்னைத் தேடிக் கொண்டு வந்தாய்?"

"பின்னே எங்கே வருவது? இருக்கும் இடத்தில் தானே தேட வேண்டும்?"

"இங்கே இருப்பேன் என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"ஏன் தெரியாது சுந்தரம்? கரும்பு உள்ள இடத்தில் தானே எறும்பு இருக்கும்!"

"அதிகப்பிரசங்கி! யார் இவன்?"

"எங்க அப்பாவின் மருமகன்!"

"அப்படி என்றால்?"

"இது புரியவில்லையா? எனக்குக் கணவர்! உனக்குக் கட்டாரி!"

"கணவனா?"

"ஏன்? பெண்களுக்குக் கணவரே கூடாதா?"

"அதிகப் பிரசங்கி! அருமை நாயகத்தை அழைத்து வருகிறேன் பார்! இந்த அறைதைப் பயலின் கைகளிலே விலங்கிட்டு வீதி வீதியாக இழுத்துச் செல்லுகிறேன் பார்!" சுந்தரம் கோபமாகத் திட்டி விட்டு அருமை நாயகத்தின் வீட்டிற்கு ஓடினான்!

வேல்விழிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை!

"அத்தான்!"

"கலங்காதே வேல்விழி! இந்தப் பாண்டியனை எந்தப் பயலும் அசைக்க முடியாது!"

"அப்படி சொல்லாதீர்கள் அத்தான்! எங்கள் அப்பா பொல்லாதவர்! ஓடி விடுங்கள்!"

"ஓடுவதா? உன்னை விட்டு விட்டு ஓடுவதா? பேடியில்லை வேல்விழி! நான் பேடியில்லை!"

இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ரங்கநாயகி சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ளத் திட்டமிட்டாள்!

"வேல்விழி! கவலைப்படாதே அம்மா! நான் இருக்கிறேன்! ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்!" என்று ரங்கநாயகி வேல்விழிக்கு ஆறுதல் கூறினாள்!

"இல்லையம்மா! தலைக்கு மேல் வெள்ளம் வந்து விட்டது! இனி அணைபோட்டுத் தடுக்க முடியாது" என்று கூறி வேல்விழி விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்!

"நான் அணை போட்டுத் தடுக்கிறேன்! நீ கவலைப்படாதே!"

"நீங்க தானம்மா எங்களை காப்பாற்ற வேண்டும்"! வேல்விழி கெஞ்சாமல் கெஞ்சினாள்!

"நான் காப்பாற்றுகிறேன்! பாண்டியனை என் வீட்டிலேயே மறைத்து வைக்கிறேன்! நீ உன் வீட்டிற்குப் போய் விடு! பிறகு பார்த்துக்கொள்ளலாம்!" ரங்கநாயகிதனக்குச் சாதகமாகத் திட்டத்தைப் போட ஆரம்பித்தாள்!

"மறைந்திருப்பதா? ஒளிந்திருப்பதா? முடியாது! முடியவே முடியாது! நாளைய தினம் என் தலைவன் பிறந்த நாள்! தமிழகத்துப் பேரறிஞன், தென்னாட்டுப் பெர்னாட்சா பிறந்த தினம்! தோரணங்கள் கட்டி, பட்டொளி வீச கொடியைப் பறக்க விட்டு என் கண்ணான அண்ணாவிற்கு பொன் விழா நடத்த வேண்டிய நாள்! நான் மறைந்து வாழ முடியாது!" பாண்டியன் உணாச்சி வசத்தால் தன்னையே மறந்து பேசிக்கொண்டிருந்தான்!

"அத்தான்! கவலைப்படாதீர்கள்! நான் நடத்துகிறேன் அந்த விழாவை!"

"நீ ஒரு பெண்! உன்னால் என்ன செய்ய முடியும்?"

"ஆண்களால் முடியாது என்று சொல்லுங்கள் ஒப்புக்கொள்ளுகிறேன்!"

"நம்ம நாட்டுப் பெண்களுக்கு அந்தத் தைரியம் இன்னும் உண்டாகவில்லையே வேல்விழி!"

"இப்படிச் சொல்லித் தான் பெண்களை மரக்கட்டைகளாக்கி விட்டார்கள்! பாருங்கள்! இந்த வேல்விழி என்னென்ன அற்புதங்களை சாதிக்கப் போகிறாள் என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள்!"

"அப்படி என்றால் என் தலைவனுடைய பிறந்த தினவிழா!"

"சீரும் சிறப்புமாக நடைபெறும்!"

"உண்மையாகவா — வேல்விழி?"

"உண்மையாக, உறுதியாக நடைபெறும்!"

பாண்டியனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை! அண்ணாவின் பொன் விழா உலகம் வியக்க நடைபெறப்போகிறது! அதுவும் பெண்களே நடத்தப் போகிறார்கள்! இனி நமக்கு விடுதலைதான்! தென்னகத்திற்கு சுதந்திரம் தான்! திராவிட நாடு ஒரு நொடிப் போழுதில் கிடைத்து விடும்! என்று பாண்டியன் தனக்குத் தானே வாய் விட்டுப் பேசிக் கொள்ள ஆரம்பித்தான்!

அத்தியாயம் 9.

அருமைநாயகம் சிறுத்தையைப் போல் உறுமிக் கொண்டிருந்தார்! "இப்படி நடக்கும் என்று தெரிந்திருந்தால் பிறந்த பொழுதே கழுத்தை நெரித்துக் கொலை செய்திருப்பேன்! வரட்டும்! இப்போது மட்டும் என்ன குடிமூழ்கிப் போய் விட்டது! கண்டதுண்டமாக வெட்டிப் புதைக்கிறேன்!" என்று கர்ஜனை செய்து கொண்டிருந்தார்!

வேல்விழி நடுக்கத்தோடு உள்ளே நுழைந்தாள்! "போகாதே நில்" என்று அருமைநாயகம் வேல்விழியை அதட்டினார்!

"ஏனப்பா உங்களுக்கு இவ்வளவு கோபம்?" வேல்விழி நயமாகப் பேச ஆரம்பித்தாள்!

"நீ செய்த வேலைக்கு கோபப்படாமல் கொஞ்சு வாங்களோ?"

"அப்படி என்னப்பா நான் செய்தேன்?"

"நீ செய்ததற்கு விளக்கவுரை வேறு கேட்கிறாயோ? மானங்கெட்டவளே! போ! ஆற்றிலோ, குளத்திலோ விழுந்து சாவு!"

"அப்பா! அருமைநாயகத்தின் மகள் நான்! இதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பேசுங்கள்!"

"அதனால் தான் ஆசை நாயகனைத் தேடிப் போனாயோ?"

"யார் சொன்னது?"

"பின்னே எங்கே போனாய்?"

"அந்தத் தறுதலை சுந்தரத்தைத் தேடித்தான் போனேன்! அந்தத் தறுதலையோ ஒரு வேசி வீட்டில் புகுந்து கிடந்தான்!"

"உன்னோடு கூட வந்தது?"

"அந்தத் தாசி கள்ளனுடைய உற்றத் தோழன் தான்!"

"என்ன சொல்லுகிறாய் வேல்விழி?" அருமைநாயகத்தின் குரலில் சூடு தணிந்திருந்தது!

"அப்பா! சுந்தரத்தைத்தேடிச் சென்றேன்! சுந்தரமோ ஒரு வேசியின் மோக வலையில் சிக்குண்டு கிடப்பதாகக் கேள்விப்பட்டேன்! சுந்தரத்தை மீட்டு அவருக்கு நல்வாழ்வளிக்க—அவருடைய உற்ற நண்பனின் உதவியால் அந்த மோசக்காரி வீட்டிற்குச் சென்றேன்! — சுந்தரம் —"இங்கே ஏன் வந்தாய்"என்று சீறி விழுந்தார்! என் மீது வீண் பழியை சுமத்தினார்! அதையும் நீங்கள் நம்பிவிட்டீர்கள்!"

வேல்விழி அருமைநாயகத்தை ஒருவாறு சமாதானப்படுத்தினாள்!

அத்தியாயம் 10.

வருக! வருக!

தென்னாட்டுப் பெர்னாட்சாவுக்குப் பொன் விழா!

தமிழகத்துப் பேரறிஞனுக்கு ஐம்பதாம் ஆண்டு விழா.

அது நமக்கெல்லாம் பெருவிழா. விடுதலை வீரர்களுக்கெல்லாம் திருவிழா.

வேழப் படையும் குதிரைப் படையும் முன்னே செல்ல

5000 பெண்கள் அணிவகுத்துச் செல்வார்கள். அவர்கள் விடுதலைக் கொடி ஏந்தி நகரெங்கும் பவனி வருவார்கள்.

தமிழ் மறத்தி
திராவிடத்தின் வீராங்கனை

X

மூன்று மணி நேரம் சொற்பொழி வாற்றுவார்.

வருக! வருக!

அனைவரும் திரண்டு வருக.

என்ற கண்ணைப் பறிக்கும் வண்ணப் போஷ்டர்கள் நகரெங்கும் ஒட்டப்பட்டிருந்தன!

ஊரெங்கும் ஒரே பேச்சு! "அண்ணாதுரைக்கு 50-ம் ஆண்டு விழாவாம். பெண்களெல்லாம் ஊர்வலமாக வரப்போகிறார்களாம், யாரோ ஒரு வீரப் பெண்மணியாம். அவள் விடுதலைக் கொடி ஏந்தி வரப்போகிறாளாம்!" என்று சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பேசிக் கொண்டிருந்தனர்!

அன்று நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது! எல்லோருமே உற்சாகப் பெருவெள்ளத்தில் மூழ்கித்திளைத்துக் கிடந்தார்கள்! இதுவரையில் நடைபெறாத முறையில் பெண்களெல்லாம் கூடி விழா நடத்துகிறார்கள் என்றால் ஒரு தனி மகிழ்ச்சி தானே ஏற்படும்.

மாலைமணி ஐந்தடிக்கும் முன்பே வீதியெங்கும் மக்கள். கடல் போல் திரண்டு—பாதையின் இருமருங்கிலும் வரிசை வரிசையாக அணி வகுத்து நிற்க ஆரம்பித்துவிட்டனர்.

ஒரு பெண்மணி குதிரை மீது அமர்ந்து இருவண்ணக் கொடியைப் பிடித்தவாறே "ஊர்வலம் வருகிறது—ஓரமாக நில்லுங்கள்" என்று சொல்லிக் கொண்டே சென்றாள்! அடுத்தபடியாக பேண்டு வாத்தியக் குழுவினர் இசை முழங்க வந்து கொண்டிருந்தனர்! அதன் பின்னே வேழப் படை வந்து கொண்டிருந்தது.

ஒரு வேழத்தின் மீது ஒரு பெண் கம்பீரமாக அமர்ந்திருந்தாள்! வழி நெடுக அவளுக்கு மாலையிட்டு வரவேற்றனர்! அதன் பின்னே 50 குதிரைகள் பூட்டிய ரதம் ஒன்று வந்து கொண்டிருந்தது! அதிலே ஒரு பெரிய படம் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. உலகமேதை, தமிழகத்தின் விடிவெள்ளி பேரறிஞருடைய திரு உருவப் படம் தான் அது!

அதன் பின்னே பெண்கள் "வாழ்க பேரறிஞன்! வாழ்க விடுதலை வீரன்!" என்ற முழக்கொலியோடு வந்து கொண்டிருந்தனர்! ஐந்து மைல் நீளமுள்ள அந்த ஊர்வலம் இரவு எட்டு மணிக்கு கடற்கரையை வந்தடைந்தது.

பெண் தலைவிகளெல்லாம் மேடையில் போய் அமர்ந்தார்கள்!

"யாரோ ஒரு பெண் பேசப் போகிறாளாம். மூன்று மணி நேரம் பேசுவாளாம். அந்தப் பெண் என்ன பேசுவாள்? எப்படி இருப்பாள்? யார் அந்தப் பெண்" என்று கூட்டத்திலிருந்த மக்களெல்லாம் ஆவல் கொண்டிருந்தார்கள்.

கூட்டத்தைச் சுற்றி போலீஸ் படைகளும் இருந்தன.

கூட்டமும் ஆரம்பமாயிற்று. ஒரு பெண் தலைமையுரையை முடித்துக் கொண்டாள், அடுத்தபடியாக மக்களெல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தப் புரட்சிப் பெண் எழுந்தாள்—

தலைவர் அவர்களே! தமிழ்க்குலப் பெண்மணிகளே! தோழர்களே! இன்று திராவிடத்தின் பெருந்தலைவன்— இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற பேரறிஞன் பிறந்த தின விழா. அவர் பிறந்து 50 ஆண்டுகள் முடிந்து விட்டன. அதை நாம் கொண்டாடுகிறோம்,

அந்தப் பெண் பேசிக்கொண்டே இருக்கும்போது கூட்டத்திலுள்ளவர்கள்—"இவள் அருமைநாயகத்தின் மகள் போல இருக்கிறதே" என்று சிலர் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். ஒரு போலீஸ்காரன் மற்றொரு போலீஸ்காரனைப் பார்த்து—"பார்த்தியா நம்ம அருமைநாயகத்தின் மகள் வெளுத்து வாங்குவதை" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

"இந்த விழா நமக்கெல்லாம் உற்சாகம் ஊட்டும் விழாவாக இருக்க வேண்டும். திராவிடத்தை மீட்க உறுதி கொள்ளும் விழாவாக இருக்க வேண்டும். பெண்கள் விடுதலைப் படையில் சேர்ந்து டில்லி செங்கோட்டையையும் முற்றுகையிடத் தயாராக இருக்க வேண்டும்" என்று பேசிக் கொண்டே போனாள்.

வேல்விழி தான் பேசுகிறாள்— அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்கிறாள் என்பது அருமைநாயகம் எப்படியோ அறிந்து கொண்டு விட்டார். 'கூட்டத்தை நோக்கி ஓடி வந்தார், "பேசாதே நிறுத்து! பேசாதே நிறுத்து" என்று மேடைக்கு வந்து அருமைநாயகம் கட்டளை இட்டார் 'முடியாது. எங்களைத் தடுக்க, எங்களைப் பேசாதே என்று சொல்ல உமக்கு என்ன உரிமை இருக்கிறது,வேண்டுமானால் கைது செய்துகொள்ளுங்கள்"என்று வேல்விழி ஆத்திரமாகப் பேசினாள். பேசிவிட்டு தலையை நிமிர்த்தினாள். அருமைநாயகம் என்பதை அறிந்து உள்ளம் பதறினாள்.

"அப்பா"

"சே. பேசாதே." அருமைநாயகம் வெறிகொண்டிருந்தார். மக்களோ வேல்விழியைப் பார்த்து "பேசுங்கள், பேசுங்கள்," என்று சத்தம் போட ஆரம்பித்தனர்.

மேடையிலிருந்த வேல்விழியின் கையைப் பிடித்து அருமைநாயகம் பரபரவென்று இழுத்துக் கொண்டு போக ஆரம்பித்தார். கூட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. போலீசார் லேசாகத் தடியடி செய்து கலைத்தனர்.

வேல்விழியை அருமைநாயகம் ஒரு அறைக்குள் தள்ளி"உன்னை இங்கேயே சிறைவைத்து சித்திரவதை செய்கிறேன் பார்" என்று கத்தினார்.

வேல்விழி பேசவே இல்லை! தலைகுனிந்தபடியே நின்று கொண்டிருந்தாள்!

அருமைநாயகம் அங்கும் இங்கும் உலாத்திக்கொண்டிருந்தார்! திடீரென்று வேல்விழி இருக்கும் அறைக்குள் வந்தார், "நாளை மறு

(12-ம் பக்கம் பார்க்க)

சத்தியமூர்த்தி காலத்தில் கார்ப்பரேஷனில் நுழைய பட்ட பாடு எத்தனை ? கெட்ட கேடு எத்தனை ? அடைந்த தோல்வி தான் எவ்வளவு ?

(5-ம் பக்கத் தொடர்ச்சி

எதிர்க்கட்சி தேர்தலிலே வெற்றி பெற்றால் ஆளும் கட்சி வெட்கப்பட வேண்டும்! எதிர்கட்சி தோற்று விட்டால் அது வெட்கப்பட வேண்டியதில்லை! தி. மு. கழகம் புதுவைத் தேர்தலில் தோல்வியுற்றதைக் கண்டு நீங்கள் பிரமாதப் படுத்துகின்றீர்கள்! இது எப்படி இருக்கின்றதென்றால் வீட்டின் உள்ளே இருப்பவன் கதவை மூடிக் கொண்டு வெளியில் இருப்பவனை "உள்ளே வர வேண்டாம்" என்று சொல்வதில் அர்த்தமுண்டு! அப்படியல்லாமல் கதவு தாளிடப்பட்டு கதவிற்கு வெளியே நிற்பவன் "உள்ளே வராதே வராதே" என்று சொல்வது போல இருக்கிறது!

அடுத்தபடியாக சிதம்பரத்திலே தேர்தல் நடைபெறப்போகிறது! இந்தத் தேர்தலிலே நம் பக்கம் வெற்றி கிட்டுமானால் காங்கிரஸ்காரர்களின் ஆர்ப்பாட்டம் கொஞ்சம் அடங்கும்! வெற்றி தோல்வியைப் பற்றி கவலையில்லாமல் மக்களுக்கு பணியாற்றி வருகிறது கழகம்!

இன்று காலையிலே பத்திரிகையை பார்த்த போது இந்தியாவின் தரைப்படை தளபதி திம்மய்யா, கப்பற்படைத் தலைவர் கட்டாரி, விமானப்படைத் தலைவர் முகர்ஜீ ஆகிய முப்படைத் தலைவர்களும் ராஜினாமா செய்துள்ளார்கள். இவர்கள் ராஜினாமா செய்வதைப் பார்த்து முப்படைத் தலைவர்களும் எனது கட்டளைப்படி நடக்க மாட்டேனென்கிறார்கள். ஆகையால் நானும் ராஜினாமா செய்கிறேன் என்று ராஜினாமா கொடுத்துள்ளார் மந்திரி! நல்ல வேளையாக நேரு முப்படைத் தலைவர்களது ராஜினாமாவை தயவு செய்து வாபஸ் பெற்றுக் கொள்ளும்படியும் ராஜினாமா செய்வதானாலும் இந்தியாவின் ஒரு மூலையிலே பாகிஸ்தானும், மற்றொரு பக்கத்திலே சைனாவும் தொந்தரவு கொடுத்து வருகின்ற இந்த நேரத்திலே ராஜினாமா செய்ய வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்! இந்த சம்பவத்தைப் பார்க்கும் போது உலகில் உள்ள மற்ற நாடுகள் என்ன நினைக்கும்! இந்தியாவிலே முப்படைத் தலைவர்கள் ராஜினாமா செய்கிறார்களென்றால் அதற்கு காரணம் என்னவாக இருக்கும்! இந்தியாவின் கோட்டைக்குள்ளே இவ்வளவு பெரிய புற்று இருக்கிறது. இந்தியாவின் அரசியலிலே ஏதோ கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதனால் தான் இந்தியாவின் முப்படைத் தலைவர்கள் ராஜினாமா கொடுத்துள்ளார்கள் என்று தானே நினைப்பார்கள்?

தரைப் படைத் தளபதியான திம்மய்யாவும், கப்பற்படைத் தளபதியான கட்டாரியும், விமானப் படைத் தளபதியான முகர்ஜியும் தங்களது 'ராஜினாமாவிற்கு என்ன காரணம் கூறியுள்ளார்கள்! எங்களுக்கு மந்திரியாக உள்ளவர் பாதுகாப்பு இலாகாவிலே உள்ள உயர்ந்த பதவிகளிலெல்லாம் தன்னிஷ்டப்படி ஆட்களை நியமித்து வருகிறார். அதனால் தான் நாங்கள் ராஜினாமா செய்கிறோம் என்று கூறியுள்ளார்கள்! இந்தியாவிலே இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது! நீங்களோ, நாங்கள் புதுவையிலே தோற்றது கண்டு குதூகலமடைகிறீர்கள்.

இது எப்படி இருக்கிறது என்றால் வீட்டிலே ஒரு பெண் கத்தரிக்காயை வைத்துக் கொண்டு நறுக்கிக் கொண்டிருக்கிறாள். அந்த சமயத்தில் அவள் குழந்தை அடுப்பினருகே போகிறது. குழந்தை ஏதாவது துடுக்குத்தனம் செய்துவிடப் போகிறதென்று கத்தரிக்காயை நறுக்கிக் கொண்டே குழந்தையை கூப்பிடுகிறாள். குழந்தையின் மீது கவனம் செலுத்திய காரணத்தால் கைவிரல் அறிவாளில் பட்டு இரத்த காயம் ஏற்படுகிறது! இதுவும் இரத்த காயம் தான். பக்கத்து வீட்டிலே உள்ள பெண்ணின் கணவன் குடித்துவிட்டு வந்து தன் மனைவியின் மண்டையிலே ஒரு கட்டையை எடுத்து அடிக்கிறான். உடனே மண்டை பிளந்து கொண்டு இரத்தம் வருகிறது. இதுவும் இரத்த காயம் தான்.

திம்மய்யாவும், கட்டாரியும், முகர்ஜியும் ராஜினாமா செய்துள்ளது குடிகாரன் தன் மனைவியின் மண்டையிலே வேண்டுமென்றே அடித்து ஏற்படுத்திய இரத்த காயம் போலிருக்கிறதே என்று சொன்னால் அதெல்லாம் ஒன்றும் பெரிய இரத்த காயம் இல்லை, பாண்டேஜ் கட்டினால் சரியாகி விடும் என்று சொல்கிறீர்கள்! பாண்டேஜ் தான் கட்டி காயத்தை ஆற்றி விட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். வடு மாறுமா? மாறாதே!

இந்த சம்பவத்தைப் பற்றி மாஸ்கோவிலே பேசப்படும். டோக்கியோவிலே பேசப்படும். பெர்லினிலே பேசப்படும். லண்டனிலே பேசப்படும்! என்ன பேசுவார்கள்? இந்தியாவிலே பாதுகாப்பு மந்திரிக்கும், முப்படைத்தலைவர்களுக்கும் ஏதோ தகராறு. இந்திய அரசியலிலே பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது போல இருக்கிறது என்றல்லவா பேசுவார்கள்! இதை எண்ணி தலை குனிய வேண்டிய நீங்கள் புதுவையிலே எங்களுக்கு ஏற்பட்டத் தோல்வியைப் பற்றி பிரமாதமாகப் பேசுகிறீர்கள்!

மொந்தை கள்ளின் விந்தையால் புதுவையில் வெற்றி பெற்றீர்கள் நீங்கள்! நாட்டையும், காத்து வீட்டையும் கவனித்துக் கொள்ள வேண்டிய நீங்கள் புதுவையிலே தி. மு. க. தோற்றது கண்டு கும்மாளம் போடுகிறீர்கள்!

சென்ற ஆண்டு பம்பாயிலே நடத்தப்பட்ட ஊர்வலங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் என்ன சொல்லி வந்தார்கள்! "இந்தோ சீனி பாய் பாய்" என்ற ஸ்லோகத்தை சொல்லிக் கொண்டிருந்தார்கள்! இதற்கு என்ன பொருள்? இந்தியாவும் சீனாவும் சகோதரர்களாக இருப்பார்கள் என்பதுதான் அர்த்தம்! இந்த ஆண்டு சீனாக்காரர்கள் இந்தியாவுக்குள்ளே மெல்ல மெல்ல புகுந்து கொண்டேயிருக்கிறார்கள்! இதைப் பற்றிக் கேட்டால் "அது என்ன அவர்கள் புகும் இடம் வெறும் காடு தானே, கரம்பு தானே, மலை தானே, விளையாத இடம் தானே" என்று கூறுகிறார்கள்! இப்படி அவர்கள் மெல்ல மெல்ல வந்து பிறகு இந்தியாவிலேயே நுழைந்துவிட கூடும், சீனாக்காரர்கள் ஏன் இந்தியாவிலே புகுந்து கொண்டேயிருக்கிறார்கள் என்று என்னைக் கேட்டால் அதற்குப் பதில் என்னால் சொல்ல முடியாது. காரணம் நான் ஒரு மந்திரியல்ல. மந்திரியாக இருந்தால் காரணம் சொல்ல முடியும்! ஆனால் எனக்கு ஒரு கதை தெரியும்! என்ன கதையென்றால் ஒரு சமயம் ஒரு பாலைவனத்திலே இருந்த கூடாரத்தில் ஒட்டகம் ஒன்று தன் மூக்கின் நுனியை மட்டும் நுழைத்துக் கொள்ள அனுமதி கேட்டது. மூக்கின் நுனியை நுழைத்துக் கொண்டு, பின்னர் தன் கழுத்தை நுழைத்துக் கொண்டது. அதன் பின்னர் முன்னங்கால்கள் இரண்டையும் உள்ளே நுழைத்துக் கொண்டது. அடுத்தபடியாக உடலை நுழைத்துக் கொண்டது. பின்னர் தனது பின்னங்கால்கள் இரண்டையும், அடுத்தபடியாக உடல் முழுவதையுமே நுழைத்துக் கொண்டு உள்ளேயிருந்த கூடாரத்துச் சொந்தக்காரனைப் பார்த்து "நீ வெளியே போ, நான் இந்தக் கூடாரத்திலேயே இருக்கிறேன்" என்று கூறியது! அதைப் போலத்தான் சைனாவும் இந்தியாவில் நுழையப் பார்க்கிறது! சென்ற ஆண்டு இந்தோ சீனி பாய் பாய் என்று கூறி வந்தீர்கள்! இந்த ஆண்டு சீனாக்காரனே இந்தியாவின் உள்ளே நுழையப் பார்க்கிறான், இந்த நிலைமையிலே திராவிட முன்னேற்றக் கழகம் புதுவையிலே தோற்றதைக் குறித்து யார் தாரை, யார் தம்பட்டை என்று கேட்கிறீர்கள்! ஒரு மூலையிலே பாகிஸ்தான் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறான், மற்றொரு மூலையிலே சீனாக்காரன் உள்ளே புகுந்து கொண்டிருக்கிறான்! எல்லையிலே மானம் போகிறது. இதை நினைத்துப் பார்க்காமல் புதுவையிலே தி. மு. க. தோற்றதைக் கண்டு ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள்!

இந்தியன் எக்ஸ்பிரஸ் தொழிலாளர் எட்டாயிரம் பேர் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இதிலே சிலர் இன்று ஏழாவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். இதைப் பார்த்துக் கொண்டு காங்கிரஸ்காரர்கள் சும்மா இருக்கலாமா? உடனடியாக மந்திரிகளிடம் சென்று "ஐயா இந்தியன் எக்ஸ்பிரஸ் தொழிலாளிகள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனரே. அவர்களிலே இரண்டுபேர் செத்தால் நிலைமை விபரீதமாகுமே. மாற்றுக் கட்சிகள் நம்மைப் பழித்துப் பேசுவதற்கல்லவோ இடமேற்படும்" என்றல்லவா கூற வேண்டும்!

நியாய விலைக் கடைகள் என்று போர்டு போட்டிருக்கிறீர்களே இப்படிச் செய்வதால் மற்றக் கடைக்காரர்கள் எல்லாம் "நாங்கள் எல்லாம் அநியாய விலைக்காரர்கள் என்று சொல்லி—பொருள்களை அநியாய விலைக்கு விற்பதற்கு வழி ஏற்படுமல்லவா" என்று கேட்க வேண்டாமா? "இதை சர்க்கார் கடை என்று மாற்றி வைத்தால் நன்றாக இருக்குமே" என்று கூற வேண்டாமா? இதையெல்லாம் விட்டு விட்டு ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பதைப் போல என்னைத் தாக்கிப் பேசுவதில் தான் கவனம் செலுத்தி வருகிறீர்கள்! என்னிடம் இரண்டு லட்சம் உறுப்பினர்கள் இருக்கின்றனர். இரண்டாயிரம் கிளைக்கழகங்கள் உள்ளன. தேர்தலிலே பதினேழு லட்சம் வாக்காளர்கள் வாக்களித்துள்ளார்கள்! இதையெல்லாம் பார்க்கின்ற போது இவ்வளவு திட்டிய பிறகும் திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து வருகிறதே என்று எண்ணுகிறீர்கள்! இது எப்படி இருக்கிறது என்றால் பக்கத்து வீட்டிலே சந்தனக் கட்டையை இழைப்பதால் ஏற்படுகின்ற நறுமணத்தைக் கண்டு நமது வீட்டில் சவுக்கு கட்டையைப் போட்டு இழைத்துப் பார்ப்போமே யென்று இழைத்தால் நறுமணம் வருமா? இது போல திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சிறப்பாகக் கூட்டம் நடத்துகின்றனரே அது போல நாமும் சிறப்பாகக் கூட்டம் நடத்த வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்கள். இதற்காக என்ன செய்கிறார்கள் 100 காண்டில் பல்புகளை நிறையத்தொங்க விடுகிறார்கள்! இதனால் என்ன

(9-ம் பக்கம் பார்க்க)

வந்த சுதந்திரத்தால் வாழ்பவன் யார்? தாழும் இனம் எது?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படும். வசதியிருக்கின்ற காரணத்தாலே மேடையை சுற்றி 100 காண்டில் பல்புகளை தொங்க விட்டு விட்டால் பூச்சிகள் சேரலாமே தவிர மக்கள் எங்கிருந்து சேருவார்கள்?

இங்கே கூடத்தான் என் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் மக்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்! விளக்கு வெளிச்சம் உள்ள வரையில் நின்று கொண்டிருக்கும் மக்களைத் தான் பார்க்க முடிகிறதே யொழிய அதற்கு அப்பால் உள்ளவர்களை என்னால் பார்க்க முடியவில்லை! வெறும் பல்புகளை நம்பி வெளிச்சம் போடுபவர்கள் அல்ல நாம்! அவர்கள் அதைச் செய்கிறார்கள்! இதை துடிப்புள்ள காங்கிரஸ்காரர்கள்—இளைஞர்கள் ஒரு முறையாவது நினைத்துப் பார்க்க வேண்டும்!

எந்த காங்கிரஸ்காரரையும் நான் எனது பகைவராகக் கருதுவது கிடையாது. காங்கிரஸ்காரர்கள் என்னுடைய இபக்கத்தில் சேர்வார்களா என்று நான் தவம் கிடக்கிறேன். அவர்களது ஆர்வத்தை மதிக்கிறேன் இந்தியா சுதந்திரமடைய வேண்டும் என்ற பேரார்வத்தின் காரணமாக வெள்ளைக்காரனை மெத்தச் சிரமப்பட்டு வெளியேற்றினீர்கள் என்பதற்காக உங்களை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். ஆனால் நீங்கள் பட்ட கஷ்டம்வெறும்விழலுக்கிறைத்த நீராகிறதே, இதை நீங்கள் உணர வேண்டாமா?

விடுதலைப் போராட்டத்திலே பங்கு கொண்டு வெள்ளையனை வெளியேற்றிய பிறகு காங்கிரஸை விட்டு வந்த நண்பர் ம. பொ. சிவஞானம் கூட அடிக்கடி தன்னுடைய பத்திரிகையிலே எழுதி வருகிறார்—வந்த சுதந்திரம் பம்பாயோடு நின்று விட்டது; சென்னைக்கு வரவில்லையே என்று.

இந்தியாவுக்கு சுதந்திரம் வந்து விட்டது. அதனால் தென்னகத்துக்கு ஏதாவது பலன் கிடைத்ததா என்று கேட்டால் அது தான் இல்லை. தபால் தலையிலே திருவள்ளுவரின் படம் பொறிக்கப்பட வேண்டுமென்கிற நம்முடைய சாதாரண கோரிக்கைக் கூட எவ்வளவு ஆணவத்துடன் நிராகரிக்கப்படுகிறது.

வடநாட்டுக்காரர்களான துளசிதாஸ், கபீர்தாஸ், இராமதாஸ் ஆகியோரின் படம் தபால் தலைகளிலே வெளியிடப்படுகிறது. ஆனால் வள்ளுவப் பெருந்தகையின் உருவப்படத்தை வெளியிட நிராகரிக்கின்றனர். இப்படி நிராகரிப்பதன் நோக்கம் என்ன? வள்ளுவரின் படம் ஏன் தபால் தலைகளிலே பொறிக்கப்படக் கூடாது என்று கேட்டால் மூன்றுவது ஐந்தாண்டு திட்டம் வரட்டும், நான்காவது ஐந்தாண்டு திட்டம் வரட்டும் ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் வரட்டும் பார்க்கலாம் என்று கூறுகிறார்கள், இவர்கள் இப்படிக் கூறுவதன் மூலம் நமது ஆயுட்காலம் முடியட்டும் என்று நினைக்கிறார்கள். போலும் கட்ட பொம்மனைப் பற்றி பிரமாதமாகப் பேசப்படுகிறது. இப்படிப் பேசப்படும் கட்டபொம்மனுக்கு இந்த நாட்டிலே ஒரு சிலை உண்டா என்றால் கிடையாது. இதையெல்லாம் காங்கிரஸிலே உள்ள இளைஞர்களை சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன், நம்முடைய நாட்டு அரசை நாமே ஆண்டால் தான் சுயராஜ்யத்தின் முழு பயனையும் அனுபவிக்க முடியும்.

இப்பொழுது சுதந்திரத்தின் பலன் முழுவதும் வடநாட்டுக்காரர்களால் தான் அனுபவிக்கப்படுகிறது.

இதற்கு உதாரணமாக சொல்ல வேண்டுமானால் நம் வீட்டிலே ஏதாவது தின்பண்டங்கள் கொண்டு வந்தால் அதை உறியிலே வைத்திருப்பார்கள். அப்படி வைத்திருப்பதால் சிறுவர்கள் கைக்கு எட்டாது. பெரியவர்கள் அதை வெகு சுலபமாக எடுத்துக்கொள்வார்கள். அதைப் போலத்தான் நமக்கு கிடைத்த சுயராஜ்யம் உறியிலே வைக்கப்பட்டுள்ள மைசூர் பாக்காக உள்ளதே தவிர ஏழைகள் எந்த விதத்தில் நன்மைகள் அடைந்துள்ளார்கள்! வடநாட்டினருக்கு அந்த சுயராஜ்யம் என்ற உறி எட்டுகிறது. அதனால் அவர்கள் சுதந்திரத்தின் பலனை அடைந்து வருகிறார்கள். சுதந்திரம் வந்ததால் தென்னாட்டாருக்கு கிடைத்த பலன் தான் என்ன?

எனக்கு முன் பேசியவர்கள் சொன்னார்கள் — சென்னையிலே மட்டும் இரண்டரை இலட்சம் பேர் வீடின்றி நடைபாதையில் அவதிப்படுகிறார்கள் என்று. சுயராஜ்யம் வந்த பன்னிரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னரும் உண்மையான பலன் கிடைத்ததா என்றால் கிடைக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும். இதைக் கண்டு நாம், வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்று சொன்னால் அதனால் பரவாயில்லை என்று அக்கரை இல்லாமல் இருக்கிறார்கள். வடக்கும் ஒன்று தான் தெற்கும் ஒன்று தான் என்றும், வடக்கு வாழுவுமில்லை தெற்கும் தேயவில்லை என்றும் கூறுகிறார்கள்!

கடைக்குப் போகிறவன் சாமான் வாங்கும் போது திராசிலே எந்தத் தட்டு மேலே போகிறது எந்தத் தட்டு கீழே போகிறது என்று பார்த்துத் தான் சாமான் வாங்குவான்! அதை விட்டு விட்டு எந்தத்தட்டு மேலே போனால் என்ன எந்தத் தட்டு கீழே போனால் என்ன என்று சாமான் வாங்க மாட்டான்! அது போல வடக்கு எனும் தட்டு வளம் பெற்று வருகிறது. ஆனால் தெற்கு எனும் தட்டு தேய்ந்துகொண்டே போகிறது. சுதந்திரம் வந்த பின் வடக்கிற்கும், தெற்கிற்கும் வித்தியாசம் இருந்து தான் வருகிறது. தென்னகத்திலே தரித்திரம் நீங்கிய பாடில்லை. ஆகையால் நாம் நமது திராவிட நாட்டை, தென்னகத்தை, தமிழகத்தை அடைந்தே தீர வேண்டும்!

வடக்கு இவ்வளவு வளம் பெற்று வருவதைக் கண்ட பின்னும் மந்திரிகள் "வடக்காவது, தெற்காவது, வடக்கு வாழவுமில்லை தெற்கு தேயவுமில்லை" என்று கூறி வருவது எப்படி இருக்கின்றதென்றால்—வெள்ளிக்கிழமை நன்றாக இருந்த ஒருவனது வலது கால் சனிக்கிழமை வீங்கி சற்று பெருத்திருக்கின்ற காரணத்தால் ஒரு டாக்டரிடம் செல்கிறான்! அந்த டாக்டர் என்ன செய்ய வேண்டும்? உடனே அந்தக் காலை பரிசோதித்து அந்தவீக்கத்திற்கு காரணமென்ன என்று அறிந்து அதற்குத் தக்க மருந்து கொடுக்க வேண்டும்! அதை விட்டு அந்த டாக்டர் அந்த ஆளைப் பார்த்து வலது கால் தானே வீங்கி இருக்கிறது. பரவாயில்லை. இடது காலில் இருக்க வேண்டிய கொஞ்ச சதை வலது காலில் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இரண்டும் உன் கால்கள் தானே! அதனால் ஒன்றும் இல்லை. நீ போகலாம் என்று சொல்லி அனுப்பினால் அந்த டாக்டரைப்பற்றி என்ன நினைப்பது! அதுபோலத் தான் இருக்கிறது-மந்திரிகள் வடக்கு வாழுவுமில்லை தெற்கு தேயவுமில்லை என்று கூறுவது!

திராவிட நாடு பிரிந்து விட்டால் இந்த அண்ணாத்துரை மந்திரியாகி விடுவானே என்று நினைக்கலாம். எனக்கு மந்திரி பதவியே வேண்டாம் என்று உறுதியாகச் சொல்கிறேன். திராவிட நாடு பிரிவதாக இருந்தால் எனக்கு மந்திரி பதவியே தேவை இல்லை என்று நான் மட்டுமல்லாமல் என்னைச் சேர்ந்தவர்கள் எவர் வேண்டுமானாலும் நீங்கள் காட்டுகின்ற எந்த இடத்திலும், எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திடத் தயாராக இருக்கிறோம்! எனக்கு மந்திரி பதவி வேண்டாம், வெங்கடராமனே இந்த காருள்ளளவும் கடல் உள்ளளவும் மந்திரியாக இருக்கட்டும்! கக்கன்ஜியே இரேழு தலைமுறைக்கு மந்திரியாக இருக்கட்டும்! காமராஜருக்கும் அப்படிச் சொல்ல ஆசை தான். ஆனால் அவருக்குத் தான் தலைமுறை கிடையாதே!

நீங்கள் கேட்கலாம் பிரிந்து விட்டால் ஆபத்து ஏற்படுமே என்று! இப்போது மட்டும் என்ன ஒரு மூலையிலே பாகிஸ்தான் தொந்தரவு கொடுத்துக் கொண்டு இருக்கிறது. மற்றொரு மூலையிலே சைனாக்காரன் தொந்தரவு கொடுத்துவருகிறான். ரஷ்யாக்காரனிடம் சிநேகிதம் உள்ள வரை சரி. சிநேகிதம் முறிந்தால் உடனே இந்தியாவின் மீது படையெடுக்கக் காத்துக் கொண்டிருப்பான்! ஆபத்து எப்போதும் தான் இருந்து கொண்டு இருக்கும். அதற்காக திராவிட நாடு பிரியக் கூடாதென்பது சரியல்ல. திராவிட நாட்டை விட சிறியதாக உள்ள சிலோன் நாடு — அறிவிலே சிறந்து விளங்க வில்லையா? வளத்திலே என்ன குறைந்து விட்டதா? சிலோன் ஒரு சிறியக் கோழிக் குஞ்சு போல இருக்கிறதே என்று எந்த வல்லூராவது வந்து கொத்திக்கொண்டா போய் விட்டது!

சிலோனுக்கும் தான் இந்தியாவைப் போல ஐக்கிய நாட்டு சபையிலே இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தியா பெரிய நாடு என்ற காரணத்தாலே அதன் பிரதிநிதிக்கு ஆறு அடி சோபாவும், சிலோன் சின்னஞ் சிறிய நாடு என்ற காரணத்தாலே அதன் பிரதிநிதி உட்கார ஒரு முக்காலியுமா கொடுக்கப்படிருக்கிறது! இரண்டும் ஐக்கிய நாட்டு சபையிலே ஒன்றாக சமமாக மதிக்கப்படுகின்ற நாடுகள் தான்.

நேரு இத்தாலியிலே ஆற்றிய சொற்பொழிவு ஒன்றில்கூறியுள்ளார்—"A Country's importance never lies in it's length and breath; but it lies only in the will power of the people of that country" என்று கூறியுள்ளார். அதாவது ஒரு நாட்டின் முக்கியத்துவம் அந்த நாட்டின் நீளத்தையும் அகலத்தையும் பொறுத்ததில்லை, ஆனால் ஒரு நாட்டு மக்களின் மனவுறுதியில் தான் அந்த நாட்டு முக்கியத்துவம் அமைந்துள்ளது என்று கூறுகிறார்! இதை நேரு வெளி நாடுகளில் சொல்கிறார். ஆனால் இதே கருத்தை இந்தியாவிலே சொல்ல மறுக்கிறார். காரணம் இதைத் இங்கே சொன்னால் தி. மு. க. வலிவு பெறும்!

இது எப்படி இருக்கிறது என்றால் மிராசுதார் ஒருவர்வீட்டிலே உட்கார்ந்திருக்கிறார். உழவன் வந்து எதிரிலே நிற்கிறான். அவனைப் பார்த்து என்னடா சாப்பிட்டு விட்டு வந்தாய் கந்தா என்று கேட்கிறார்! "சோளக் கஞ்சி சாப்பிட்டுவிட்டு வந்தேன்" என்று சொல்கிறான் கந்தன்! இதைக் கேட்ட மிராசுதார் என்ன சொல்கிறார்—'ஆமாம் கந்தா சோளக் கஞ்சிதான நல்லது—உடம்புக்கு வலிவு தரும். ஆனால் எனக்குப் பிடிப்பதில்லை. நீ சோளக் கஞ்சியே சாப்பிட்டு வா—நல்ல வலிவுடன் இருப்பாய்" என்கிறார்! இதைக் கேட்டுவிட்டு

(10-ம் பக்கம் பார்க்க)

காமராஜர் மந்திரியாக இருக்கும் போது அண்ணுதுரைக்கு மந்திரி வேலை கிடைக்காதா?

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள் என்று கேட்கிருன் கந்தன். இப்போது தான் என் மனைவி கொக்கோ போட்டுக் கொடுத்தாள் அதைத்தான் சாப்பிட்டேன். நீ அதை சாப்பிட்டால் இவ்வளவு திடகாத்திரமாக இருக்கமுடியாது, கொக்கோ உன் உடம்புக்கு த்தங்காத பானம்! அதனால் அதை நீ சாப்பிடாதே என்று கூறுகிருர்.

நேரு பண்டிதர் தம்மை மிராசுதார் ஸ்தானத்திலும், நம்மையெல்லாம் உழவர் ஸ்தானத்திலும் வைத்துப் பேசுகிருர். இங்கே வந்தால் நாடு பிரியக் கூடாது என்கிருர். இங்கே நாடு பிரிந்தால் டாட்டா, பிர்லா, டால்மியா முதலிய செல்வந்தர்களெல்லாம் கொழுக்க முடியுமா? அதனால்தான் நம்முடைய நாட்டு மக்களுக்கு வாதத்தை மறைக்கிருர்,

இத்தாலி போன்ற சின்னஞ்சிறிய நாடுகளில் உள்ள மக்கள் நேருவிற்கு மாலை போட்டு வரவேற்பு அளிக்கும் போது என்ன சொல்கிருர். ஒரு நாட்டின் முக்கியத்துவம் அந்த நாட்டின் நீளத்திலும் அகலத்திலும் இல்லை—ஆனல் அந்த நாட்டு மக்களின் மன உறுதியில் தான் இருக்க வேண்டும் என்கிருர். டென்மார்க்கா, ஸ்விடனே, நார்வேயா இவைகள் எல்லாம் சின்னஞ்சிறிய நாடுகள் தான்—இப்படித்தான் இருக்க வேண்டும் என்றுகூறுகிருர். இதைக்கேட்டு அந்த நாட்டு மக்கள் என்ன சொல்கிருர்கள். "ஆஹா! என்ன தெளிவான அரசியல்—இப்படிப்பட்ட அரசியல் அல்லவா அரசியல்-இவர் அல்லவா சிறந்த அரசியல் ஞானி—வாழ்க நேரு. வளர்க, அவரது ராஜ தந்திரம்" என்று கூறுகிருர்கள். ஆனல் இதே நேரு இந்தியா ஒன்ருக இருக்கவேண்டும். இமய முதல் குமரி வரை நாங்கள் கட்டி வைக்கின்ற கதர் நூல் அறுந்து விடக் கூடாது என்கிருர்! இந்தியாவிலே எக் பாரத்—ஏக இந்தியா -என்று சொல்வது போல். இத்தாலி, கிரீஸ், போர்ச்சுகல், முதலிய நாடுகளுக்கு செல்லும்போது ஐரோப்பா என்ருல் ஒரே கண்டமாகத்தான் இருக்க வேண்டும்—இம்மாதிரி சிறுசிறு நாடுகளாகப் பிரிந்து இருப்பது சரியல்ல என்று சொல்லியிருப்பாராகில் அவரை மறு தடவை எவரும் தங்கள் நாட்டுக்கு விஜயம் செய்யும்படி அழைக்க மாட்டார்கள்!

நேருவே ஒருதடவை இந்தியாவிலே எந்த பகுதியாவது பிரிந்து போவதானல் பிரித்துக் கொடுப்பதற்கு தடையில்லை என்று கூறியுள்ளார், அப்படிச் சொன்னவர் திராவிட நாட்டைப் பிரித்துக் கொடுப்பதுதானே?

சிலர்சொல்லலாம்—திராவிட நாடு பிரிந்து விட்டால் டெல்லிக்கும் நமக்கும் விரோதம் ஏற்பட்டு விடும் என்று! பிரிந்துவிட்டால்விரோதம் ஏற்பட்டு விடும் என்று எப்படிச்சொல்லமுடியும். அவர்கள் வீட்டில் கல்யாணம் நடந்தால் நாம் போவோம். அதேபோல் நம் வீட்டில் கல்யாணம் நடந்தால் அவர்கள் வரட்டும். விரோதம் ஏன் ஏற்பட வேண்டும். பாகிஸ்தான் பிரிந்தது, அதனல் நமக்கும் அவர்களுக்கும் என்ன விரோதமா ஏற்பட்டு விட்டது? இல்லையே!

நேரு அயூப்கானை விமான நிலையத்தில் சந்தித்து எழுபத்தி ஐந்து நிமிஷ நேரம் அல்லவா பேசி இருக்கிருர், ஐசன்ஹோவருக்கும், குருஷேவுக்கும்இல்லாத விரோதமா நமக்குள் ஏற்பட்டு விடப் போகிறது! அமெரிக்காவும் ரஷ்யாவும் அணுகுண்டை வைத்துக கொண்டு ஒன்றையொன்று எந்தநேரத்தில் அழிக்கலாம் என்று பார்த்துக்கொண்டிருக்கிறது! அப்படி உள்ள போதே ஐஸன்ஹோவரும், குருஷேவும் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசுகிருர்கள் என்ருல் நமக்குள்என்ன விரோதம் ஏற்படப்போகிறது. இப்படிப் பிரிக்காமல்இந்த பகையை நீடிப்பதால் வடநாட்டான் மேலும் மேலும் சுரண்டுவானே தவிர வேறு ஒன்றும் நடக்கப் போவதில்லை!

மந்திரியாக வேண்டுமென்கிற அல்ப ஆசை எனக்குக் கிடையாது. அந்த அல்ப ஆசை எனக்கிருந்தால் நான் எப்போதோ மந்திரியாகி! ஒரு ஐந்தாண்டு காலத்திற்கு மந்திரியாக இருந்து இப்போது மாஜி மந்திரியாகி இருப்பேன். ஒரு மந்திரியாவது அவர்கள் மந்திரி பதவியிலிருந்து விலகிய பிறகு அவர்கள் இருக்கும் இடம் தெரிகிறதா? மந்திரிகள் வேண்டுமானல் சொல்லலாம்—அண்ணுதுரையாவது மந்திரியக வருவதாவது என்று. ஆனல் அவர்கள் சரியாக இருக்கும்போதுநெஞ்சில்கைவைத்துப் பார்த்தார்களானல் அப்படிச் சொல்லமாட்டார்கள்!

காமராஜரே மந்திரியாகஇருக்கும் போது அண்ணுதுரை ஏன் மந்திரியாகக் கூடாது. ஏன் பிரகாசமே மந்திரியாக இருந்தார். அவர் கையெழுத்துப் போடுவதென்ருல் அவர் தனது வலது கையை இடது கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டு கையெழுத்துப் போடுவார். அப்படிப்பட்டவர் மந்திரியாக இருந்த போது நான் மந்திரியாக முடியாதா? சமீபத்திலே டெல்லிக்கு சென்ருந்த போது உள்நாட்டு இலாகா மந்திரியாக உள்ள கோவிந்த வல்லப பந்த் அவரது மேஜை மீதிருந்த ஒரு காகிதத்தை எடுப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டியதைப் பார்த்தேன். இவரது கை நரம்புகளிலும், கழுத்து நரம்புகளிலும் ஏதோகோளாறு இருக்கின்ற காரணத்தால் இவர் தலையும், கையும் ஆடிக் கொண்டே இருக்கிறது. அதனல் இவர் மேஜை மீதிருந்த காகிதத்தை எடுக்கதனது வலதுகையை ஊன்றி இடது கையால் மிகவும் கஷ்டப்பட்டு எடுக்க வேண்டி இருந்ததைப் பார்த்தேன். இப்படிச் சொல்வதை நான் பந்தை பற்றி கேவலமாகக் கூறுகிறேன் என்று நினைக்க வேண்டாம். உண்மையான பரிதாபத்துடன்தான் இதை நான் சொல்கிறேன். அப்படிப்பட்ட வயோதிகர் மந்திரி பதவியிலே இருக்கும் போது நாங்கள் ஏன் மந்திரி பதவி வகிக்க முடியாது.

நான் மந்திரியாக் வேண்டுமென்ருல் என்ன செய்ய வேண்டும். நாலு கூட்டங்களிலே அவர்களைப் பற்றி புகழ்ச்சியாகப் பேச வேண்டும். அவர்கள் செய்கின்ற புன்னகையை சிறிது மதிப்பதாகவே காட்டினுல் போதும்.

"நான் நேற்று தூங்கிக் கொண்டிருக்கையிலே பாரத மாதா என் கனவில் வந்தாள். கண்களிலே கண்ணீர் விட்டாள் என்னைப்பார்த்து—"ஆ! மகனே இப்போதாவது திருந்தி விட்டாயே! சந்தோஷம். இந்தா பிடி! இந்த கதர் சட்டையைப் போட்டுக் கொள் என்று கதர் சட்டையையும் என்னிடம் கொடுத்தாள் இவைகளைப் போட்டுக் கொள் என்று சொன்னுள். நானும் அவைகளைப் பெற்றுக் கொண்டேன்." என்று ஒருநாள் காலையில் காமராஜரிடம் போய் இம்மாதிரி கனவு கண்டேன் என்று சொல்லி என்னையும் காங்கிரஸில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னல் போதுமே உடனே எனக்கு மந்திரி பதவி கிடைக்குமே.

மந்திரி மாணிக்க வேலருக்கு எப்படி மந்திரி பதவி கிடைத்தது ராமசாமி படையாச்சி என்ன செய்தார்? அவருக்கு எப்படி மந்திரி பதவி கிடைத்தது! மந்திரி வேலை தான் என் நோக்கம் என்ருல் நான் எப்போதே மந்திரியாகி இருப்பேனே.

மந்திரி பதவியில் இருக்கின்ற வரை தான் அந்த பதவியிலிருப்பவர்களுக்கு மதிப்பு. ஆனல் அந்த பதவியில் இருந்து போய் விட்டால் அவர்களுக்கு மதிப்பே கிடையாது. சென்னையிலே எத்தனை பேர் மந்திரிகளாக இருந்தார்கள். அவர்களைப் பற்றி இன்று மக்கள் நினைக்கிருர்களா? இல்லையே. ஜோதி வெங்கடாசலம் அம்மையாரைப் பற்றி இப்போது யாராவது நினைக்கிருர்களா? மாதவமேனன் என்றொரு மந்திரி இருந்தார். அவினசிலிங்கம் மந்திரியாக இருந்தார். இவர்களுடைய பெயர் மக்களின் நினைவிலிருக்கின்றதா? இவர்களைப்பற்றியாராவது நினைத்துப் பார்க்கின்ருர்களா என்ருல் அது தான் கிடையாது.

மந்திரிகள் பதவியிலிருக்கின்ற வரை கொளுத்தி விடப்படும் வாணங்களாக சொல்லலாம் மந்திரிபதவி போனவுடனே அவர்கள் கொளுத்திவிடப்பட்டு கீழே விழுந்த வாணங்களாகத்தான் கருதப்படுகிருர்கள். வாணங்கள் கொளுத்தி விடப்படும் மருந்து நிறைந்த வாணங்களாக இருக்கும். ஆனல் அவைகள் விடப்பட்டதும் மேலே சென்று நட்சத்திரப் பூக்களை உதிர்த்து எறிந்து கீழே விழுகின்றன. கீழே எறிந்து விழுந்த வாணங்களை சிறுவர்கள் எடுத்து அதில் ஏதாவது மருந்து இருக்கின்றதா என்று பார்ப்பார்கள். அதில் மருந்து இருக்காது. அதுவெறும் குழாயாகத் தான் இருக்கும்! அதிலே மண்ணை அடைத்து சிறுவர்கள் மறுபடிம் வாணம் விடுவார்கள்! அதுபோலத்தான் மந்திரி பதவியும்.

மந்திரி பதவியில் உள்ளவரை இவர்கள் மற்றவரை ஏவுவார்கள். மாஜி மந்திரியானதும் இவர்களை அவர்கள் ஏவுவார்கள் மந்திரி பதவியில் உள்ளவரை மற்றவர்கள் இவர்கள் கொளுத்தும் வாணக்குழாய்களாக இருப்பார்கள். ஆனல் மந்திரி பதவி போனவுடனே இவர்கள் மற்றவர்களுக்கு வாணக் குழாய்களாக ஆகி விடுகிருர்கள்.

தனி நாடாகப் பிரிந்து விட்டால் வாழ்வதற்கு முடியுமா என்று சிலர் கேட்கலாம்.

அண்ணன் தம்பி இரண்டு பேர் இருக்கின்றனர், தம்பிக்கு பிரிந்து போக வேண்டுமென்ற எண்ணம் உண்டாகிறது. உடனே அண்ணனிடம் சென்று தன் பங்கை பிரித்துக்கொடுத்து விட்டால் தான் தனியாகப் போய்விடுவதாகச் சொல்கிருன். அண்ணன தம்பிக்கு புத்திமதி சொல்கிருன் — அண்ணனைப் பொறுத்த வரையில் நல்லவர் தான். ஆனல் இந்த அண்ணி

(11ம் பக்கம் பார்க்க)

வாணம் எறிந்து விழுந்தால் வெறும் குழாயாகி விடும்!

மாஜியானால் மந்திரிகளுக்கும் அந்த கதி தான்!

10-ம் பக்கத் தொடர்ச்சி

வந்த பிறகு தான் குடும்பத்தில் சச்சரவு ஏற்பட்டு விட்டது. அதனால் நான் பிரிந்து போகத் தான் போறேன் என்கிறான் தம்பி. உடனே அண்ணன் தம்பியைப் பார்த்து "என்ன நீயா பிரிந்துப் போகப் போகிறாய்—பார்க்கிறேன் ஒரு கை" என்று மீசை மேல் கை போடுகிறான்—தைரியக்காரனாக இருந்தால் இப்படிச் செய்வான். கடவுள் பக்தி உள்ளவனாக இருந்தால் "ஆண்டவனே—என் தம்பி தனியாகப் பிரிந்து பொக வேண்டுமென்கிறான்—நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும்—நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டும்" என்று ஆண்டவனை வேண்டிக் கொள்வான். தன் மனைவியைப்பார்த்து நீ சிடு சிடு என்று இருப்பதால் தான் என் தம்பி பிரிந்து போகிறேன் என்கிறான், அவனிடம் நீ நல்ல விதமாக நடந்து கொள் என்று கூறுவான், சரியென்று அண்ணியும் கூறிவிட்டு அதற்கு முன்னால் வெறும் இலை போடுபவள் அன்று வாழைஇலைபோட்டு ஒரு கரண்டி நெய் வார்ப்பவள் இரண்டு கரண்டி நெய் ஊற்றுவாள். இதைப் பார்க்கும் தம்பி என்ன நினைப்பான். சாதாரணமாக நல்ல எண்ணம் கொண்டவனானால் "ஆஹா! அண்ணி நமக்கு இரண்டு கரண்டி நெய் ஊற்றுகிறாள் இந்த மாதிரி அண்ணி நமக்கு எங்கே கிடைக்கப் போகிறாள். நாம் தனியாக போனால் ஒரு கரண்டி நெய்கூட கிடைக்காதே — அதனால் நம் அண்ணனை விட்டு பிரிந்து தனியாகச் செல்லக்கூடாது" என்று நினைப்பான், ஆனால் மனதிலே அண்ணனை விட்டுப் பிரிந்துதான் போக வேண்டும் என்ற ஒரே எண்ணம்கொண்ட தம்பி என்ன நினைப்பான்—'நமக்கே அண்ணி இரண்டு, இரண்டு கரண்டி நெய் ஊற்றுகிறாள் என்றால் அண்ணனுக்கு நாலு கரண்டி நெய் அல்லவா ஊற்றுவாள். ஆகமொத்தம் ஆறுகரண்டி நெய் அல்லவா செலவழிக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு ஆறு கரண்டி நெய் செலவழிந்தால் இந்தக் குடும்பம் உருப்படுமா? அதனால் இந்தக் குடும்பத்தில் இருந்து பிரிந்து போகத்தான்வேண்டும்" என்று நினைப்பான். அண்ணி ஒரு கரண்டி நெய்க்குப் பதிலாக இரண்டு கரண்டி நெய் ஊற்றுவது போல மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வந்தால் எல்லாம் சரியாகி விடும்; நான்காவது ஐந்தாண்டு திட்டம் வந்தால் சரியாகி விடும் என்கிறார்கள். பிரிவினை உணர்ச்சி ஏற்பட்டு விட்டது. அதை இனி தடுத்து நிறுத்த முடியாது.

"நாம் கரடியாகக் கத்துவதனால் திராவிடம் பிரிந்து விடாது. இந்த அண்ணா ஒரு கோழை, இவர் பலாத்காரம் வேண்டாம் வேண்டாம் என்று நம்மை அடக்கி வைக்கிறார். காங்கிரஸ்காரன் சுயராஜ்யம் பெற தபாலாபீஸைக் கொளுத்தியது போல, தந்திக் கம்பிகளை அறுத்தது போல, தண்டவாளங்களைப் பெயர்த்தது போல நாமும் செய்தால் தான் திராவிட நாடு கிடைக்கும் என்ற உணர்ச்சி" எழும்பிவிட்டது. இந்த உணர்ச்சி அப்படியே வளர்ந்தால் என்ன ஆகும், என்னை விட்டு வேறு தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். அடிக்கு அடி. உதைக்கு உதை, குத்துக்கு குத்து என்ற விபரீதம் ஏற்படும்!—இந்த விபரீதம் நடைபெறாமல் பார்த்துக் கொள்வது ஆட்சியாளரின் கடமையாகும்.

சமீபத்தில் இங்கு பேசிய ஓரிரண்டு தினங்களுக்குப் பின்னர் நமது நிதியமைச்சர் சுப்பிரமணியம் தென்னிந்திய வியாபாரிகள் சங்கத்திற்கு சென்று பேசியுள்ளார். இந்த சங்கத்திலே மதராஸ் கேரளம், கன்னடம் ஆகிய நாலு இடத்து வியாபாரிகளும் சேர்ந்து இருந்தார்கள், பம்பாய், கல்கத்தா, ஐதராபாத் ஆகிய இடங்களில் உள்ள வியாபாரிகள் இந்த சங்கத்தில் இருக்கின்றார்களா என்றால் அதுதான் இல்லை, நாம் சொல்லுகின்ற திராவிடத்திலிருந்துதான் இந்த சங்கத்திற்கு வியாபாரிகள் வந்திருந்தனர். இந்த வடக்கு தெற்கு என்று பேசுவது ஆகாது என்று பேசிய நிதியமைச்சர் சுப்பிரமணியம் என்ன செய்திருக்க வேண்டும். தென்னிந்திய வியாபாரிகள் சங்கம் என்று ஏற்படுத்தி இருக்கிறீர்களே! தென்னிந்திய வியாபாரிகள் சங்கம் என்று பிரித்து வைத்திருப்பது சரியல்ல. அகில இந்திய வியாபாரிகள் சங்கம் என்று இருப்பதுதான் சரி. வடக்கு, தெற்கு என்று பிரிப்பது சரியல்லவென்று சொல்லி கூட்டத்திற்குப் போகாதிருந்திருக்க வேண்டும்.

சரி போகத்தான் போனாரே—சும்மாவாவது இருந்தாரா—அதுதான் இல்லை—என்ன சொன்னார் தெரியுமா? "தெற்குப்பகுதி வடக்குப் பகுதியைக் காட்டிலும் சற்று 'பின் தங்கிதான் இருக்கிறது" என்று பேசினார். நாம் வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது என்று சொன்னால் இல்லை எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது என்கிறார். இப்படி நம்மிடம் சொல்லிவிட்டு தென்னிந்திய வியாபாரிகள் சங்கத்திலே தெற்குப் பகுதி வடக்குப் பகுதியைக்காட்டிலும் சற்று பின் தங்கி தான் இருக்கிறது என்கிறார்.

இது எப்படி இருக்கிறது என்றால் காது கேட்காத ஒருவரைப் பார்த்து நீ என்ன செவிடா என்று கேட்டால் 'இல்லை காது கொஞ்சம் மந்தம் அவ்வளவு தான்—செவிடு இல்லை" என்று சொல்வது போல இருக்கிறது. சிலர் வெளியே சென்று வருகின்ற நேரத்திலே கதவு மூடப்பட்டிருக்குமானால் தங்கள் மனைவியின் பெயரைச்சொல்லி "கமலா, காந்தா, கதவைத் திற" என்பார்கள் ஆனால்சிலர்—"வீட்டிலேயாரது-நான்தான் கூப்பிடுகிறேன் கதவைத் திற" என்று கூறுவார்கள். இவர்களது எண்ணம் என்ன? தங்கள் மனைவிமார் தங்களது குரலைத் தெரிந்து கொண்டு வந்திருப்பதுநமது கணவர்தான்என்று புரிந்து கொண்டு, கதவைத் திறக்க வேண்டும் என்பது. இதைப் போலத்தான் இருக்கிறது—சுப்பிரமணியம் சுற்றி வளைத்துப் பேசுவது.

நமது மந்திரிகளிடத்திலே அதிகாரம் இல்லை. இன்று கூட நான் ஒரு மந்திரியைச் சந்தித்துப் பேசினேன். அவரிடம் இந்தியன் எக்ஸ்பிரஸ் தொழிலாளர் போராட்டத்தைப் பற்றி எடுத்துக் கூறி இதைப்பற்றி கவனிக்கக் கூடாதா என்று கேட்டேன். மந்திரி என்ன சொன்னார் — டெல்லிக்குப் போகப் போகிறேன்—அங்கேஇதைப்பற்றிபேசிப் பார்க்கிறேன் என்று பதில் சொன்னார், உண்ணாவிரதமிருக்கும் தொழிலாளர்களில் ஒருவர் திடீரென்று போய்விட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள்—என்ன ஆகும்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் மதுரையிலே ஏராளமாக அச்சடிக்கப்பட்டு இங்கு அனுப்பப்படுகிறது. அதிக எண்ணிக்கை பிரதிகள் அச்சடிப்பதற்கு அதிகமான காகிதம் வேண்டும் — இந்த காகிதம் வினியோகிக்கும் அதிகாரம் டெல்லியிடம் இருக்கிறது. அந்த அதிகாரம் சென்னை சர்க்காரிடம் இருந்தால் உடனடியாக இந்தியன் எக்ஸ்பிரஸ் முதலாளி மீது நடவடிக்கை எடுக்க முடியும். காமராஜரைக் கேட்டால் அந்த அதிகாரம் என்னிடம் இல்லையே என்கிறார்! உண்மையிலே சொல்லப்போனால்காமராஜரின் கரம் ஓரளவு இன்று உயர்ந்திருக்கின்றதென்றால் அதை நான்தான் உயர்த்தினேன் என்று சொல்லிக் கொள்ளமுடியும்.

தேயிலை இங்கே விளைகிறது. அதன் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் டெல்லியிடம் இருக்கிறது. காப்பிக் கொட்டை இங்கே விளைகிறது! ஆனால் அதன்விலையை டெல்லிதான் நிர்ணயிக்க வேண்டும். மிளகு இங்கே விளைகிறது—அதன்விலையை டெல்லி சர்க்கார்தான் கட்டுப் படுத்த வேண்டும்! ரப்பர் இங்கே உற்பத்தி செய்யப் படுகிறது—அதன் விலையை டெல்லிதான் நிர்ணயிக்க வேண்டும்! இப்படி எல்லா அதிகாரமும் அவர்களிடம் இருக்கிறது. எதற்கும் நாம் அவர்களை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது, ஆகையினால் தான் தனியாகப் பிரிந்து வரவேண்டும் என்கிறோம்.

வடநாடு முன்னேறிக் கொண்டே இருக்கிறது. தென்னாடு பின்தங்கி இருக்கிறது. இப்போது பின்தங்கி விட்டு பின்னர் முன்னேறுமானாலும் வடநாட்டிற்கு சரியாக முன்னேற முடியாது. பின் தங்கியபடியே தான் இருக்கும்.

நம்முடைய பிரச்னை அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்னை. திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடத்தின் விடுதலைக்காகப் பாடுபடும் ஒரு இயக்கமாகும். ஆகையால் நீங்கள் அனைவரும் இந்த இயக்கத்தில் சேர்ந்து நல்லாதரவைத் தருவீர்களென்றும் திராவிடத்தைப் பெற எல்லோரும் பாடுபடுமாறு உங்களனைவரையும் கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

மாலைமணி

புதிய சந்தா விபரம்

இந்தியா, சிலோன்		பர்மா, மலேயா	
ஆண்டு சந்தா	ரூ. 8—00	ஆண்டுசந்தா	ரூ. 10—00
அரை ஆண்டு	ரூ. 4—25	அரை ஆண்டு	ரூ. 5—25

தனி இதழ் 16 காசு

Registered as a Newspaper in CEYLON
Regd No.M. 7074 **MALAIMANI** விலை 16 காசு PhoneNo. 83285

ஆணவமே, அலட்சியமே, அகம்பாவமே, உன் மறு பெயர் தான்

பம்பாய் தமிழ்ச் சங்கமா ?

மதுவிலக்குகொண்டு வந்த காந்தியின் பெயராலே கள்ளுக்கடை, ஜீவ காருண்யம் போதித்த புத்தன் பெயராலேகசாப்புக்கடைதமிழ்ச் சங்கம் பெயராலே தமிழ்க் கொலை. மகாத்மா மதுகடை, கௌதமன் கசாப்புக்கடை என்ற பெயர்களாலே இன்னும்கடைவைத்து வியாபாரம்செய்ய எவரும் முன் வரவில்லை. ஆனால்? தமிழ் சங்கம் என்ற பெயராலே தமிழ்க் கொலை செய்வது மட்டும் இப்போது நடைபெறுகின்றன.

தமிழர் நெஞ்சங்களிலே வாளினை பாச்சுகின்ற நிலை தான் இது! என்றாலும் இவ்வளவு பெரிய இழிவு வேலையை பம்பாயில் நெருக்கடி மிகுந்தநீண்டவீதியில்மூன்று லட்ச ரூபாய் செலவழித்து பம்பாய்தமிழ்ச்சங்கம் இல்லை இல்லை பாம்பே டமில் சங்கம் என்ற பெயரில் ஏழில் மனை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு தமிழ் என்று சொல்லவோ, எழுதவோ தெரியாதவர்கள் எல்லாம் தமிழ்ச்சங்கத்தின் தலைவராகவும் செயலாளராகவும் முக்கிய நிர்வாகிகளாகவும் அமர்ந்து கொண்டு கொஞ்சம்கூட பயம் இல்லாதவர்களாக தமிழை கொலை செய்யும் தமிழ்க்கொலைஞர்களாக நடமாடுகிறார்கள்.

“தமிழைப்பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்” என்ற புரட்சிக் குரல் எழுந்த பிறகும் இந்த தமிழ்க் கொலை. விலாவில் வேல் கொண்டு குத்துவது போன்ற நிகழ்ச்சி இது!

“தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் தாம் செத்தொழிவதால் ஒரு சிறு கடுகளவேனும் நன்மை ஏற்படுமாயின் அப்படி செத்தொழிவது தான் தங்கள் வாழ்விலோர் திருநாள்” என்று தமிழையும் தமிழ் நாட்டையும் காக்க லட்சோப லட்சம்தமிழ் வீரர்கள் காலத்தையும்நேரத்தையும் எதிர்பார்த்திருக்கும் இந்த நேரத்தில் தமிழ் சங்கம் என்ற பெயராலே தமிழ்க் கொலை. வீரத்தை எடை போடும் நிலை இது!

‘தேமதுர தமிழோசையை தெருவெல்லாம் கேட்டிட செய்வீர்’ என்று சொன்ன பாரதியாரின் விழாவை தவறாமல் கொண்டாடுபவர்கள் தான் தமிழ்ச் சங்கத்தார். ஆனால்!!! தமிழின் புகழை பெருமையை, சிறப்பை பண்பை, அழகை, சுவையை தேனினும் இனிமையான தங்கள் சொற்பொழிவினால் தமிழை பரப்புவர்களுக்கு பம்பாய் தமிழ்ச் சங்கத்திலே இடமில்லை!

அரசியல் அனாதை சிவஞானம் பாம்பாய் தமிழ்ச்சங்கத்திலே பேசலாம்-ஆனால் நமது கலைஞர்கருணாநிதியின் சொற்பொழிவு இருக்கக் கூடாதாம்!

“பிரான்சு நாட்டை ஜார் மன்னன் தான் ஆண்டான் என்று அடித்துப்பேசும் கக்கன்ஜீ அவர்களுக்குபம்பாய் தமிழ் சங்கத்திலே பேச இடம்-ஆனால்-பிரான்சு நாட்டை லூயி பரம்பரையினர் தான் ஆண்டது என்று உண்மை சரித்திரம் சொல்லும் நமது சிந்தனை சிற்பி சிற்றரசுக்கு பம்பாய் தமிழ்ச் சங்கத்திலே இடமில்லை!

காதல் ஆசிரியர் இராமநாதனுக்கு பம்பாய் தமிழ்ச் சங்கத்திலே வரவேற்பு ஆனால்- நமது திராவிடநாடு அரங்கண்ணலுக்கு மறுப்பு.

நாடோடிக்கு பம்பாய் தமிழ்சங்கத்திலே வரவேற்பு ஆனால் நமது நாடறிந்த நடராசன் அவர்களுக்கு எதிர்ப்பு!

யாரோ பன்னீர் செல்வத்துக்கு பம்பாய் தமிழ் சங்கத்திலே இடமுண்டாம் ஆனால் நமது ‘மன்றம்’ செழியன் அவர்களுக்கு இல்லையாம்.

காமராசரின் தமிழ் இவர்களுக்கு வேண்டுமாம். ஆனால் நமது கவிஞர்கண்ணதாசன் அவர்களின் கவிதை நடை வேண்டாமாம்!

ஜீவா பம்பாய் தமிழ்ச் சங்கததிலே கதறலாமாம். ஆனால் நமது ஆசைத்தம்பி அவர்கள் கருத்துரை கூடாதாம்.

முத்தையாவின்சொத்தை வார்த்தைக்கு தமிழ் சங்கத்திலே இடமுண்டு — ஆனால் நமது டி.கே. சீனிவாசனின் கருத்தாழம்கொண்ட விளக்கம கூடாதாம்,

நடிகர் சகஸ்ரநாமம்அவர்களுக்கு பம்பாய் தமிழ்ச் சங்கததிலே வரவேற்பும் விருந்தும் நடத்துவார்களாம். ஆனால் நமது நடிப்பிசைப் புலவர் ராமசாமி அவர்களுக்குகதவடைப்பார்களாம்

அனந்த ராமகிருஷ்ணனின் இலக்கிய சொற்பொழிவு இவர்களுக்கு இனிக்கிறதாம்—ஆனால் நமது நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் இலக்கியச் சொற்பொழிவு கசக்கிறதாம்.

இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால் நமது நாவலரும், நடராசன் அவர்களும், கலைஞரும்,கவிஞரும், டி.கே. சீனிவாசனும், இளங்கோவும், அரங்கண்ணலும், ஆசைத்தம்பியும், மனோகரனும்,சிற்றரசும், இராமசாமியும், செழியன் அவர்களும் அரசியல் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்பதால்.அதுவும் இதுவரை எந்தக் கட்சியும் எழுப்பத்துணியாத தமிழகமும், ஆந்திரமும், கேரளமும், கன்னடமும் டெல்லி பிடியிலிருந்து மொழி வழி பிரிந்து, இன வழி ஒன்றுபட்ட சுதந்திர திராவிட கூட்டாட்சி ஏற்பட வேண்டுமென்ற பிரிவினைக் கருத்தைக் கொண்டவர்கள் என்பதால் மட்டுமே பம்பாய் தமிழ்சங்கத்திலே வரவேற்பு இல்லையாம்.

அரசியல் கட்சிக்காரர்களுக்கு பம்பாய் தமிழ் சங்கத்திலேஇடமில்லையென்றால் ஜீவாவும், முத்தையாவும்,கக்கனும், காமராஜரும் பக்தவத்சலமும்,சுப்பிரமணியமும் யார்? இவர்கள் நாடறிந்த அரசியல் கட்சி தலைவர்கள் தானே?

எப்படியோ! எதனாலோ தலைவர்களாகவந்தவர்களும் வயிற்றுப் பிழைப்புக்காக இதுவும் தமிழ் தான் என்று எதை எதையோ கிறுக்கித் தள்ளும் எழுத்தாளர்களும், பள்ளியிலே படிக்க வேண்டிய நேரத்தில் மூவர்ணக் கொடியைகையிலேந்தி தபாலாபீசைக்கொளுத்தி அதில் இந்தியாவின் சுதந்திரத்தை எதிர்பார்த்தவர்களுக்கும் — பாரத மாதாவுக்கு ஜே போட்டுக் கொண்டே தண்டவாளங்களைப் பெயர்த்தவர்களுக்கும்—தந்திக் கம்பிகளை அறுத்தவர்களுக்கும் —அதிகாரிகள் மீது திராகவகத்தை வீசியவர்கள் என அவர் அவர்களின் பயங்கர செய்கைகளை! கணக்கெடுத்து அதற்கு தக்க அளவு பதவிகளை அளித்ததினால் மட்டுமே தலைவர்களாக வந்தவர்களுக்கு—அவர்கள் தமிழின் தொன்மையை அறியாதவர்களாக இருப்பினும் அவர்கள் பம்பாய் தமிழ் சங்கத்திலே தமிழைப்பற்றி பேசலாமாம். அவர்களுக்கு வரவேற்பும், விருந்தும். இவர்கள் நடத்துவார்களாம். ஆனால் தமிழை அறிந்து உண்மையாக தமிழின் மீது அக்கறை கொண்டவர்களுக்குப் பம்பாய் தமிழ் சங்கத்திலே இடம் கிடையாதாம்!

யார் உண்மையான தமிழ்ப் பற்று கொண்டவர்கள் என்பதை நாடு தினம் தினம் நம்மவர்களுக்கு கொடுத்துக் கொண்டுவரும் வரவேற்புகளில் இருந்து நிச்சயமாக அறிய முடியும். என்றாலும் தாயகத்தை விட்டுவந்துள்ள தமிழர்களுக்கென ஏற்படுத்தப்பட்டிருப்பதாக சொல்லிக் கொள்ளும் பம்பாய் தமிழ் சங்கத்தினர். சிறந்த தமிழ் காவலர்களும் தமிழ் அறிஞர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தை சாரந்தவர்களாக இருப்பதால் மட்டுமே அவர்களிடம் ஆணவத்துடனும், அலட்சியத்துடனும் அகம்பாவத்துடனும் இனிமேலும்நடந்து கொள்வார்களானால் எதிர் காலத்துக்கு நிச்சயமாக பதில்சொல்ல வேண்டியவர்களாவார்கள் பம்பாய் தமிழ்ச்சங்கத்தினர் என்பதை உணரவேண்டும்.

(தொ. து. அன்புச்செழியன்)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் உனக்குத் திருமணம். சுந்தரம் தான உனக்குக் கணவன். இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்” என்று எரிமலை போல் அனலைக் கக்கி விட்டு வெளியே சென்றார். சுந்தரத்திடமும் இந்தச செய்தியை சொன்னார்.

திருமண விழாவிற்கான எல்லா ஏற்பாடுகளையும் உடனே நடத்தவும் ஆரம்பித்தார்!

வீட்டுச் சிறையிலே வாடிக் கிடந்த வேலவிழியின் உடல் கண்ணீர் வெள்ளத்திலே நனைந்து கிடந்தது!

அங்கே வளையை நோக்கி ஓடிக்கொண்டிருந்த ஒரு எலியை ஒரு பூனைக் கவ்விக் பிடித்துக் கொண்டிருந்தது! ஆம்! வேல் விழிக்கும் இந்த கதி தானே?

—தொடரும்

ஆசிரியரும்,வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ, கலவிப்பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு. சென்னை-5.
அலுவலகம் 1/35 வாணியர் தெரு. சென்னை-14